# பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

## வலு

1994 இல் வலுத்துறையின் முக்கிய பண்பாக விளங்கியது யாதெனில் வர்த்தகம் சார்ந்த வலுவின் நுகர்வில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியாகும். மின்வலுவின் தீர்வைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் மின் வலுவுக்கான கேள்வி இவ்வாண்டில் பெரும்பாலும் 10 சதவீதத்தால் உயர்வடைந்தது. நிரம்பல் பக்கத்தில், இலங்கை மின்சபைக்கு கேள்வியின் பெரும் பங்கினை நீர்மின்வலுவின் மூலம் ஈடுசெய்யக்கூடியதாக இருந்தது. மின்வலுவுக்கான கேள்வியின் தொடர்ச்சியான வளர்ச்சியுடன் சாதகமற்ற காலநிலை நிலைமைகளும் இணைந்து ஆண்டின் மூன்றாம் காற்பகுதியில் வெப்பவலு உருவாக்கத்தில் அதிகரிப்பினை வேண்டி நின்றன. அதேவேளை தன்னியக்கடீசல், பாரடீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் என்பவற்றுக்கான அதிகரித்த கேள்வி காரணமாக 1994இல் பெற்றோலிய உற்பத்திகளுக்கான மொத்தக் கேள்வி குறிப்பிடத் தக்களவில் விரிவடைந்தது. இவ்வாண்டில் பெற்றோலிய உற்பத்திகளுக்கான அதிகரித்த நுகர்வு எண்ணெய்ச் செலவில் ஏற்படுத்திய பாதகமான விளைவானது பன்னாட்டுச்சந்தையில் நிலவிய மசகெண்ணெயின் குறைந்த விலைகளினால் பெருமளவிற்குத் தணிக்கப்பட்டது. 1994இல் வலுத்துறையில் காணப்பட்ட அபிவிருத்திகள் குறுங்காலத்தில் ஆழமான கேள்வி முகாமைத்துவக் கொள்கைக்கான தேவையினையும் நீண்டகாலத்தில் நிரம்பலில் திட்டமிடப்பட்ட விரிவாக்கத்துக்கான உத்தியினையும் சுட்டிக்காட்டுகின்றது.

கேள்வியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பிரதிபலிப்பதாய் மொத்த வலு நுகர்வில் வர்த்தகம் சார் வலுவின் பங்கு (பெற்றோலியம், மின்வலு, திரவப் பெற்றோலியவாயு) 1993இன் 32சதவீதத்திலிருந்து 1994இல் 34 சதவீதத்திற்கு அதிகரித்தது. எரிபொருள் விறகு, வேளாண்மை எச்சங்கள், விலங்குக்கழிவு, ஏனைய மரங்களின் உட்கூறுகள் என்பவற்றை உள்ளடக்கிய வர்த்தகம் சாராத வலு மூலங்கள் வலுவுக்கான முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி 50 இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமமாக அல்லது நாட்டின் மொத்த வலு நிரம்பலில் 66 சதவீதமாக (76இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமன்) விளங்கின.

## மின்வலு

மின்வலுவின் மொத்த நிறுவப்பட்ட இயலளவு 1,137 மெகாவாட் நீர் மின்வலுவையும் 272 மெகாவாட் வெப்ப மின்வலுவையும் உள்ளடக்கி 1,409 மெகாவாட்டுக்களாக 1992 தொடக்கம் மாற்றமின்றியிருந்தது. எனினும் இலங்கை மின்சபையினால் உருவாக்கப்பட்ட மொத்த வலு 1993 இன் 3,979 கிகாவாட்டிலிருந்து 1994 இல் 4,364 கிகாவாட் மணித்தியாலயங்களுக்கு உயர்வடைந்தது. முந்திய ஆண்டின் விரிவாக்கமான 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது 10 சதவீதங்கொண்ட வளர்ச்சியாகும். 1994இன் முதல் அரைப்பகுதியில் நீர்மின்வலு உருவாக்கம் 21 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் ஆண்டின் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் சில நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்தமையைத் தொடர்ந்து நீர்மின்வலு

## அட்டவணை 1.29

## வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1993 – 1994

| விடயம் | அலகு | 1993 | 1992 இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1994* | 1993 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. பெற்றோலிய உற்பத்திகள் | | | | | |
| 1.1 ஏற்றுமதிகளின் அளவு ... | மெ. தொ. | 589,929 | 46.0 | 611,791 | 3.7 |
| 1.2 ஏற்றுமதிகளின் பெறுமதி ... | ரூ. ப. இ. | 3,801.0 | 37.2 | 3,958.9 | 4.2 |
| ... | சிஎஉ. ப. இ. | 56.5 | 25.6 | 56.0 | -0.9 |
| 1.3 இறக்குமதிகளின் அளவு | | | | | |
| 1.3.1 மசகெண்ணெய் ... | மெ. தொ. | 1,799,597 | 38.8 | 1,897,629 | 5.4 |
| 1.3.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ,, | 294,090 | -55.5 | 288,328 | -2.0 |
| 1.3.3 திரவப் பெற்றோலிய வாயு ... | ,, | 37,560 | 19.7 | 50,193 | 33.6 |
| 1.4 இறக்குமதிகளின் பெறுமதி (கொ. க) | | | | | |
| 1.4.1 மசகெண்ணெய் ... | ரூ. ப. இ. | 11,222,37 | 46.4 | 11,407.45 | 1.6 |
| ... | சிஎஉ. ப.இ | 166,53 | 34.1 | 161.24 | -3.2 |
| 1.4.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ரூ. ப. இ. | 2,553.63 | -53.8 | 2,446.36 | -4.2 |
| ... | சிஎஉ. ப. இ. | 37.89 | -57.7 | 34.58 | -8.7 |
| 1.4.3 திரவப் பெற்றோலிய வாயு ... | ரூ. ப. இ. | 545.00 | 10.0 | 704.00 | 29.2 |
| ... | சிஎஉ. ப.இ. | 8.09 | 0.9 | 9.95 | 23.0 |
| 1.5 மசகெண்ணெயின் சராசரி விலை (கொ. க) ... | ரூ/பீப்பா | 842.71 | 4.9 | 806.11 | -4.3 |
| ... | ஐ.அ.டொ/பீப் | 17.47 | -4.6 | 16.31 | -6.6 |
| 1.6 உள்நாட்டு விற்பனைகள் ... | மெ. தொ. | 1,417,712 | -4.6 | 1,567,918 | 10.6 |
| 1.6.1 சிறப்புப் பெற்றோல் ... | ,, | 172,812 | 4.8 | 183,680 | 6.3 |
| 1.6.2 தன்னியக்க டீசல் ... | ,, | 666,513 | 9.9 | 727,923 | 9.2 |
| 1.6.3 பார டீசல் ... | ,, | 18,020 | -85.6 | 53,902 | 199.1 |
| 1.6.4 சிறப்பு டீசல் ... | ,, | 23,216 | 2.2 | 24,274 | 4.6 |
| 1.6.5 மண்ணெண்ணெய் ... | ,, | 191,629 | 1.2 | 206,929 | 8.0 |
| 1.6.6 உலை எண்ணெய் ... | ,, | 219,918 | -12.6 | 228,345 | 3.8 |
| 1.6.7 அவுட்ரூர் ... | ,, | 72,563 | -11.0 | 78,443 | 8.1 |
| 1.6.8 ஏவி வாயு ... | ,, | 164 | -12.8 | 165 | 0.6 |
| 1.6.9 திரவப் பெற்றோலிய வாயு ... | ,, | 52,877 | 18.3 | 64,257 | 21.5 |
| 1.7 உள்நாட்டு விலை | | | | | |
| 1.7.1 சிறப்புப் பெற்றோல் ... | ரூ/லீற்றர் | 35.00 | 6.1 | 35.00 | – |
| 1.7.2 தன்னியக்க டீசல் ... | ,, | 12.20 | 4.7 | 11.40 | -6.6 |
| 1.7.3 பார டீசல் ... | ,, | 11.60 | 4.0 | 10.70 | -7.8 |
| 1.7.4 சிறப்பு டீசல் ... | ,, | 15.00 | 3.1 | 14.20 | -5.3 |
| 1.7.5 மண்ணெண்ணெய் ... | ,, | 11.80 | 34.1 | 9.50 | -19.5 |
| 1.7.6 உலை எண்ணெய் ... | ,, | | | | |
| 500 செக்கண்ட் ... | ,, | 7.10 | - | 7.10 | – |
| 800 செக்கண்ட் ... | ,, | 6.80 | - | 6.80 | – |
| 1000 செக்கண்ட் ... | ,, | 6.50 | - | 6.50 | – |
| 1.7.7 நிலக்கீல் ... | ,, | 15.15 | - | 15.15 | – |
| 1.7.8 திரவப் பெற்றோலிய வாயு ... | ரூ./ கி. கி. | 20.00 | 20.9 | 19.23 | -3.9 |
| 2. மின் வலு | | | | | |
| 2.1 நிறுவப்பட்ட இயலளவு ... | மெ. வா. | 1,409.65 | - | 1,409.65 | – |
| 2.1.1 நீர் மின் ... | ,, | 1,137.45 | - | 1,137.45 | – |
| 2.1.2 வெப்ப மின் ... | ,, | 272.20 | - | 272.20 | – |
| 2.2 உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் ... | கி. வா. ம. | 3,979.0 | 12.4 | 4,364.0 | 9.7 |
| 2.2.1 நீர் மின் ... | ,, | 3,796.0 | 30.9 | 4,089.0 | 7.7 |
| 2.2.2 வெப்ப மின் ... | ,, | 183.0 | -71.4 | 275.0 | 50.3 |
| 2.3 மொத்த விற்பனைகள் ... | கி. வா. ம. | 3,270.1 | 12.1 | 3,582.0 | 9.5 |
| 2.3.1 வீடு ... | ,, | 826.0 | 17.3 | 933.0 | 13.0 |
| 2.3.2 கைத்தொழில் ** ... | ,, | 1,223.4 | 15.7 | 1,404.0 | 14.8 |
| 2.3.3 வர்த்தகம் ... | ,, | 641.1 | 10.4 | 593.0 | -7.5 |
| 2.3.4 உள்ளூராட்சி மன்றங்கள் ... | ,, | 536.4 | -1.5 | 612.0 | 14.1 |
| 2.3.5 தெரு விளக்குகள் .. | ,, | 43.2 | 50.0 | 40.0 | -7.4 |

* தற்காலிகமானவை

** 1994 பெப்புருவரி தொடக்கம் உணவகங்களுக்கான மின் விற்பனையும் அடங்கியுள்ளது.

மூலங்கள் : இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சபை, வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயு கம்பனி, வரையறுக்கப்பட்ட லங்கா மரைன் சேவிசஸ் (பிறைவேட்)

உருவாக்கம் குறைவடைந்தமையால் 1994இல் மொத்த நீர் மின்வலு உருவாக்கம் 8 சதவீதமாக மட்டும் இருந்தது. இதன் விளைவாக ஆய்விற்குரிய ஆண்டில் மேலதிகக் கேள்வியினை ஈடுசெய்வதற்கு வெப்ப மின்வலு உருவாக்கம் 275 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு 50 சதவீதத்தால் உயர்வடைந்தது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிப்பதாய் வலு உருவாக்கத்திற்கான எரிபொருட்செலவு 1993 இன் ரூ. 3,470 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 8,010 இலட்சத்திற்கு அதிகரித்தது. அதேவேளை வலு உருவாக்கம், கடத்தல், மற்றும் வழங்கலின் போது ஏற்பட்ட இழப்புக்கள் 1993 இன் மொத்த உருவாக்கத்தில் 17.6 சதவீதத்திலிருந்து 1994 இல் 17.8 சதவீதத்திற்கு மிகச்சிறிதளவால் அதிகரித்தன. கடத்தல் மற்றும் விநியோகத்தின் மீது ஏற்படும் இழப்புக்களைக் குறைப்பதற்காக இலங்கை மின்சபை “விநியோகம் விரிவாக்கம் மற்றும் புத்தாக்கச் செயற்றிட்டம்” என்றழைக்கப்படும் முக்கிய செயற்றிட்டமொன்றினைப் பொறுப்பேற்றுள்ளது. அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் விநியோக முறைகளைப் புத்தாக்கம் செய்வதற்காக இரண்டு செயற்றிட்டங்களையும் (உள்ளூராட்சிமன்ற பொறுப்பேற்பு I மற்றும் II) பொறுப்பேற்றுள்ளது.

1994இல் மின் தீர்வைகள் இலங்கை மின்சபையினால் இரு தடவைகள் திருத்தியமைக்கப்பட்டன. பெப்புருவரியில் வீட்டுத்துறைக்குப் பொருந்துவதான தீர்வை வீதங்கள் நுகர்வின் மட்டத்தினைப் பொறுத்து 1 சதவீதத்திற்கும் 183 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சிற்கு உயர்த்தப்பட்டன. ஏனைய வகைகளின் தீர்வைகள் ஏறத்தாள 30 சதவீதத்தால் உயர்வடைந்தன. எனினும் 1994 மேயில் வீட்டுத்துறையின் முதல் 100 அலகுகள் மீதான தீர்வை வீதம் 1993 யூலையில் நிலவிய மட்டத்திற்குக்குறைக்கப்பட்டுத் தீர்வை வீதங்களை 29 சதவீதத்திற்கும் 65 சத வீதத்திற்கும் இடைப்பட்ட வீதத்தினால் குறைவடையச் செய்தது. இத்தீர்வைத் திருத்தங்களின் விளைவாக அலகு ஒன்றுக்கான சராசரி தீர்வை வீதம் 1993இன் ரூ.2.64 இலிருந்து 1994இல் ரூ.3.68இற்கு 39சதவீதத்தால் அதிகரித்தது. திருத்தியமைக்கப்பட்ட மின்கட்டண வீதங்கள் முந்திய வீதங்களுடன் அட்டவணை 1.30 இல் தரப்பட்டுள்ளன.

மின்வலுவின் விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் இலங்கை மின்சபையின் மின் விற்பனைகள் 1994இல் 3,582 கிகாவாட் மணித்தியாலங்களாக விளங்கி முந்திய ஆண்டினைவிட 10 சதவீத அதிகரிப்பைக்காட்டின. மின் விற்பனைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் ஓரளவிற்கு மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை 1993இன் 1,266,250 இலிருந்து 1994இல் 1,413,041இற்கு அதிகரித்தமையினால் ஏற்பட்டதாகும். குறிப்பாக வீட்டுத்துறையில் நுகர்வோரின் மொத்த எண்ணிக்கை கிராமிய மின்னூட்டல் திட்டங்களின் விரிவாக்கம் காரணமாக 1994இல் 1,221,095இற்கு 12 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1994இல் வீட்டுத்துறை நுகர்வோருக்கான விற்பனைகள் 933 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு 13 சதவீதத்தால் விரிவடைந்தன. அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளால் உந்தப்பட்டு கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறைக்கான விற்பனைகள் ஆய்விற்குரிய ஆண்டில் 7 சதவீதத்தால் விரிவடைந்தன. இலங்கை மின்சபையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் லங்கா எலக்ற்றிக் கம்பனிக்குமான தொகையளவான விற்பனைகள் முந்திய ஆண்டினைவிட 1994இல் 14 சதவீதத்தால் அதிகரித்தன.லங்கா எலக்ற்றிக் கம்பனியில் விற்பனைகள் பெருமளவிற்கு வீட்டு மற்றும் வர்த்தகத்துறைக்கான அதிகரித்த விற்பனைகள் காரணமாக 12 சதவீதத்தால் விரிவடைந்தன.

இலங்கை மின்சபை ஆய்விற்குரிய ஆண்டில் மின்வலு உட்கட்டமைப்பின் விரிவாக்கம், தரமுயர்த்தல் மறுசீரமைப்பு என்பவற்றின் மீது ரூ.37,000 இலட்சங் கொண்ட தொகையினை முதலிட்டது. மொத்த முதலீட்டில் 50சதவீதத்திற்கும் கூடுதலான தொகை வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால்

**அட்டவணை 1.30**

**திருத்தியமைக்கப்பட்ட மின் வீதங்கள்**

| வகை | 01.07.93 இலிருந்து (ரூ./கி.வா.ம.) | 01.02.94 இலிருந்து | | 01.05.94 இலிருந்து | |
|---|---|---|---|---|---|
| | | திருத்தியமைக் கப்பட்ட வகை | திருத்தியமைக் கப்பட்ட வீதம் (ரூ./கி.வா.ம.) | திருத்தியமைக் கப்பட்ட வகை | திருத்தியமைக் கப்பட்ட வீதம் (ரூ./கி.வா.ம.) |
| 1. வீட்டு நோக்கங்கள் | | | | | |
| அலகுகள் 0 - 10 ... | 0.60 | | | 0 - 10 | 0.60 |
| 11 - 50 ... | 1.20 | 0 - 60 | 1.70 | 11 - 50 | 1.20 |
| 51 - 100 ... | 2.40 | | | 51 - 100 | 2.40 |
| 101 - 450 ... | 3.90 | 61 - 180 | 4.40 | 101 - 180 | 4.40 |
| > 450 ... | 5.20 | > 180 | 5.25 | > 181 | 5.25 |
| 2. கைத்தொழில் நடவடிக்கைகள் | | | | | |
| சிறிய ... | 3.05 | | 4.00 | | 4.00 |
| நடுத்தர ... | 2.90 | | 3.80 | | 3.80 |
| பாரிய ... | 2.80 | | 3.65 | | 3.65 |
| 3. பொது நோக்கங்கள் | | | | | |
| சிறிய ... | 4.05 | | 5.30 | | 5.30 |
| நடுத்தர ... | 4.00 | | 5.20 | | 5.20 |
| பாரிய ... | 3.85 | | 5.00 | | 5.00 |
| 4. உணவகங்கள் * | | | | | |
| சிறிய ... | 4.05 | | – | | – |
| நடுத்தர ... | 4.00 | | – | | – |
| பாரிய ... | 3.85 | | – | | – |

மூலம் : இலங்கை மின் சபை.

குறிப்பு :

சிறிய : மின்வலுவின் வழங்கல் 400 / 230 வோல்ட்டுக்களும் ஒப்பந்தக் கேள்வி 50 கிவாஅ இற்குக் குறைவானதும்.

நடுத்தர : மின் வலுவின் வழங்கல் 400 / 230 வோல்ட்டுக்களும். ஒப்பந்தக் கேள்வி 50 கிவாஅ இற்குச் சமமானதும் அல்லது அதற்குக் கூடுதலானதும்.

பாரிய : மின்வலு வழங்கல் 11 கிவா, 33 கிவா, 132 கிவா.

நாளின் நேரத்தொடொத்த தீர்வை கைத்தொழில் மற்றும் உணவக வகைகளுக்கு மட்டுமே பொருந்தும். உச்ச நேர வீதங்களும் உச்சமற்ற நேர வீதங்களும் 30-31 சதவீதத்தால் மேல் நோக்கித் திருத்தப்பட்டது.

* 1994 பெப்புருவரியிலிருந்து கைத்தொழில்துறைத் தீர்வைகள் உணவகங்களுக்கும் பொருந்தும்.

நிதியிடப்பட்ட கடத்தல் முறையை உயர்த்தல் மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டம் (ரூ.11,320 இலட்சம்), பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட வலு வழங்கல் விரிவாக்க மற்றும் மறுசீரமைப்புச் செயற்றிட்டம் (ரூ. 8, 100 இலட்சம்) என்பவற்றில் செலவிடப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களாக வலு வழங்கல் மற்றும் கடத்தல் செயற்றிட்டம் (ரூ. 5,380இலட்சம்), மேல் கொத்மலை செயற்றிட்டம் (ரூ.3,850இலட்சம்), புதிய கிராமிய மின்னூட்டல் திட்டம் கட்டம் II (ரூ. 3,290இலட்சம்), இரண்டாவது வலு வழங்கல் மற்றும் கடத்தல், செயற்றிடம் (ரூ.2,200 இலட்சம்) றன்தம்பே வலுச்செயற்றிட்டம் (ரூ. 1,360இலட்சம்) விளங்கின. 1994இல் இலங்கை மின் சபை அதன் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மீது ஒதுக்கப்பட்ட செலவில் 59சதவீதத்தை மட்டும் செலவிட்டது. கடத்தல் மற்றும் இணைப்புத்துணை நிலையங்களின் அபிவிருத்திச் செயற்றிட்டம் (97 சதவீதம்), சபுகஸ்கந்த டீசல் விரிவாக்கச்செயற்றிட்டம் (99 சதவீதம்) என்பவற்றில் உயர்ந்த வீதத்திலான குறைச்செலவு பதிவுசெய்யப்பட்டது.

## பெற்றோலிய உற்பத்திகள்

மசகு எண்ணெய் இறக்குமதிகளின் அளவு 1993 உடன் ஒப்பிடுகையில் 1994இல் 98,032 மெற்றிக் தொன்களால் ( 5 சதவீதம்) அதிகரித்து 1,897,629 மெற்றிக் தொன்களாக விளங்கியது. மசகு எண்ணெயின் (பீப்பாய் ஒன்றுக்கான) சராசரி சருவதேச விலை 1993இன் ஐ.அ. டொலர் 17.47 இலிருந்து 1994இல் ஐ.அ. டொலர் 16.31இற்கு வீழ்ச்சியடைந்தது. இது கடந்த ஐந்து ஆண்டுகளிலும் பதிவுசெய்யப்பட்ட விலைகளில் மிகவும் குறைவானதாகும். மசகு எண்ணெய் மீதான மொத்தச் செலவு ரூபா நியதிகளில் 2 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தவேளையில் சிஎஉ நியதிகளில் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1994இன் சாதகமான விலைப் போக்குகளைப் பிரதிபலித்தது. 1994இல் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதிகள் 288,328 மெற்றிக் தொன்களாக விளங்கி 1993இன் இறக்குமதிகளைவிட2 சதவீதம் குறைவாக அமைந்தது. 1994இல் கொழும்பு வாயுக் கம்பனியால் இறக்குமதி செய்யப்பட்ட திரவப் பெற்றோலிய வாயுவின் அளவு 34 சதவீதத்தால் அதிகரித்து 50,193 மெற்றிக் தொன்களாக விளங்கிய வேளையில் அவ் இறக்குமதிகளின் பெறுமதி 29 சதவீதத்தால் ரூ.7,040 இலட்சத்திற்கு அதிகரித்தது. இவ் அபிவிருத்திகளைப் பிரதிபலிப்பதாய் 1993இன் மொத்த இறக்குமதிச் செலவில் 7.7 சதவீதத்திற்கு வகைகூறிய பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவு1994 இல் 6.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1994இல் சில முதன்மைப் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் பல தடவைகளில் திருத்தியமைக்கப்பட்டன. தன்னியக்க டீசலின்விலை இரு தடவைகள் உயர்த்தப்பட்டது. 1994 பெப்புருவரியில் இலீற்றர் ஒன்றுக்கான விலை ரூ.12.20 இலிருந்து ரூ.12.30 இற்கும் 1994 மாச்சு இறுதியில் இலீற்றர் ஒன்று ரூ.12.40 இற்கும் உயர்த்தப்பட்டது. 1994 செத்தெம்பர் இறுதி தொடக்கம் தன்னியக்க டீசலின் விலை லீற்றர் ஒன்று ரூ.11.40 ஆக இலீற்றர் ஒன்றுக்கு 1 ரூபாவினால் குறைக்கப்பட்ட வேளையில் மண்ணெண்ணெயின் விலை இலீற்றர் ஒன்று ரூ. 9.50 ஆக இலீற்றர் ஒன்றுக்கு ரூ.2.30இனால் குறைக்கப்பட்டது. குறைவடைந்த உலகப் பெற்றோலிய விலைகளின் காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த மேலதிக இலாபத்தின் ஒரு பகுதி விலைகளில் ஏற்பட்ட இக்குறைப்புக்கள் மூலம் உள்நாட்டுப் பாவனையாளருக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன.

பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு நுகர்வு முந்திய ஆண்டின் 5 சதவீதவீழ்ச்சிக்கு மாறாக 1994இல் 11 சதவீதமான கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்தது. நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு எல்லா வகையான பெற்றோலிய உற்பத்திகளிலும் காணப்பட்டது.1992 இலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடையத் தொடங்கிய தன்னியக்க டீசலின் நுகர்வு 1994இல் 10 சதவீதத்தால் விரிவடைந்தது. இதே போக்கினைத் தொடர்ந்து1994இல் பெற்றோலுக்கான கேள்வி 183,680 மெற்றிக் தொன்களாக விளங்கி 6சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. முந்திய ஆண்டில் இது 5 சதவீதத்தால் உயர்வடைந்தது. 1994இல் 53,902 மெற்றிக் தொன்களாக விளங்கிய பாரடீசலின் நுகர்வு முந்தியஆண்டினைவிடஏறத்தாள மூன்று மடங்கு அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இது வெப்ப வலு உருவாக்கத்திற்காக பாரடீசல் அதிகரித்த அளவில் பயன்படுத்தப்பட்டமையினால் ஏற்பட்டதாகும். 1994இல் உலை எண்ணெயின் விற்பனைகள் 228,345 மெற்றிக் தொன்களுக்கு 4 சதவீதத்தால் உயர்வடைந்தன. மின்வலு அல்லாத துறையின் உலை எண்ணெய் நுகர்வு 192,100 மெற்றிக் தொன்களாக விளங்கி முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1994இல் மண்ணெண்ணெய்க்கான கேள்வி முந்திய ஆண்டின் சிறு அளவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8 சதவீதத்தால் அதிகரித்து 206,929 மெற்றிக் தொன்களாக விளங்கியது. மண்ணெண்ணெயின் நுகர்வு ஆண்டின் நாலாம் காலாண்டில் மிகவும் முனைப்பாகக் காணப்பட்டதுடன் 1993 இன் இணையான காலாண்டின் கேள்வியுடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தால் உயர்வடைந்தது. அதேவேளை திரவப்பெற்றோலிய வாயுக்கான கேள்வி 1994இல் 22 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து 64,257 மெற்றிக் தொன்களாக விளங்கியது. இது கடந்த 5 ஆண்டுகளிலும் பதிவுசெய்யப்பட்டதில் ஆகக்கூடிய அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பில் 70 சதவீதத்திற்கும் கூடியபங்கு வீட்டுத்துறையினரின் அதிகரித்த அளவிலான வாயுப்பாவனை காரணமாக ஏற்பட்டதாகும்.

## போக்குவரத்து

போக்குவரத்துத்துறை 1994இல் கலப்பானசெயலாற்றத்தைப் பதிவுசெய்தது. தொழிற்பாடுகளின் அளவு நியதிகளில் இவ்வாண்டில் மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளும் தனியார்துறைப் பயணிகள் போக்குவரத்துப்பணிகளும் மேலும் விரிவடைந்தன. எனினும் இலங்கைப் புகைவண்டிப்பகுதியின் தொழிற்பாடுகள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மாற்றமின்றி விளங்கின.

## பேருந்துப் போக்குவரத்து

### மக்கள் மயப்படுத்தப்பட்டதும் தனியாரும்

ஆண்டின் இறுதியில் மொத்தமாக 93 மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகள் தொழிற்பட்டன. முன்னைய ஆண்டினைப் போன்றே, புதிய பேருந்துகளைக் கொள்வனவு செய்வதன்மூலமும் ஏற்கனவேயுள்ள தொகுதியை புத்தாக்கம் செய்வதன் மூலமும் தமது பேருந்துத் தொகுதியினை வலுப்படுத்துவதற்கு இக்கம்பனிகள் உறுதியான முயற்சிகளை மேற்கொண்டன. மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின் தற்போதைய பேருந்துத் தொகுதிக்கு 1994 இல் மொத்தமாக 1,600 பேருந்துகள் சேர்க்கப்பட்டன. பேருந்துத் தொகுதி விரிவடைந்தமையின் விளைவாக, இக்

## அட்டவணை 1.31

## போக்குவரத்துத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1993 – 1994

| விடயம் | அலகு | 1993 | 1992 இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1994* | 1993 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் | | | | | |
| 1.1 தனியார் பயணி வண்டிகள்** ... | எண்ணிக்கைகள் | 1,835 | -26.0 | 3,347 | 82.4 |
| 1.2 தனியார் ஊர்திகள்*** ... | ,, | 16,802 | -16.7 | 22,517 | 34.0 |
| 1.3 உந்து ஈருருளிகள் ... | ,, | 53,934 | -18.1 | 36,791 | -31.8 |
| 1.4 சரக்குகள் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் ... | ,, | 4,948 | 19.3 | 5,195 | 5.0 |
| 1.5 நில ஊர்திகள் ... | ,, | 6,646 | 21.1 | 7,160 | 7.7 |
| 1.6 ஏனையவைகள் ... | ,, | 8 | -94.0 | 34 | 325.0 |
| 1.7 தனியார் சொகுசு வண்டிகள் ... | ,, | 295 | -30.6 | 476 | 61.4 |
| 2. இலங்கைப் புகைவண்டிப் பகுதி | | | | | |
| 2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 8.1 | – | 8.2 | – |
| 2.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ,, | 2,821.6 | 8.0 | 3,229.6 | 14.5 |
| 2.3 சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் ... | ,, | 159.2 | -10.1 | 151.3 | -5.0 |
| 2.4 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 820 | -7.3 | 900 | 9.8 |
| 2.5 மொத்தச் செலவு ... | ,, | 1,236 | -0.2 | 1,686 | 36.4 |
| 2.6 மிகை/குறை (+/-) ... | ,, | -416 | 17.8 | -786 | 88.9 |
| 3. மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகள் | | | | | |
| 3.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 272.2 | 1.5 | 306.5 | 12.6 |
| 3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ,, | 13,608.0 | 6.0 | 15,613.1 | 14.7 |
| 3.3 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 3,043.7 | 11.2 | 3,528.5 | 15.9 |

* தற்காலிகமானவை

** மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட பேருந்துகளையும் உள்ளடக்கும்.

*** இரட்டை நோக்கத்திற்கான ஊர்திகளையும் உள்ளடக்கும்

மூலங்கள் : உந்து ஊர்திகள் திணைக்களம், இலங்கை புகைவண்டிப் பகுதி, இலங்கைப் போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக் குழு.

கம்பனிகளினால் நாளொன்றிற்கு தொழிற்படுத்தப்பட்ட பேருந்துக்களின் சராசரி எண்ணிக்கை 1993இன் 3,709 இலிருந்து 1994இல் 4,261இற்கு அதிகரித்தது.எனினும் இவ்விரிவாக்கத்தின் மத்தியிலும் 1994 இறுதியில் மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளிடம் கிடைக்கத்தக்கதாக இருந்த பயன்மிக்க பேருந்துத்தொகுதி பொதுமக்களுக்கு சிறந்த பணிகளை வழங்கத் தேவையான தொகுதியில் 75சதவீதமாக மட்டும் இருந்தது. இம்முன்னேற்றங்களினைத் தொடர்ந்து மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின் தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் முன்னைய ஆண்டிலும் பார்க்க 1994இல் 3,070 இலட்சத்திற்கு 13சதவீதத்தினால் உயர்வடைந்தன. மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து நியதிகளில் மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகள் 156,130 இலட்சம் மதிப்பிடப்பட்ட பயணிகள்கிலோ மீற்றர்களுக்கு வகைகூறி இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 15 சதவீத அதிகரிப்பினை எடுத்துக் காட்டின.மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின் மதிப்பிடப்பட்ட வருமானம் 1994இல் ரூ.35,280 இலட்சத்திற்கு 16 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை, பேருந்து

இறக்குமதி மற்றும் பேருந்து உடற்கோப்புடன் தொடர்பான நடவடிக்கைகளும் ஆண்டுமுழுவதும் தொடர்ந்தன. 1994 இறுதியில் செயற்றிட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்ட பணிகளுக்கும் தனியார் துறைக்கும் 2,397 பேருந்துகளை வழங்கியது.

ஆய்விற்குரிய ஆண்டில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பயணிகள் பணிகளை முன்னேற்றும் நோக்குடன் குறிப்பிட்ட சில வழிமுறைகளைஅறிமுகப்படுத்தியது. பல கம்பனிகளின் முகாமைத்துவம் மாற்றப்பட்டதுடன் கம்பனிகள் வர்த்தகரீதியான முயற்சிகளாக இயங்கத்தக்க விதத்தில் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. கிராமப் பகுதிகளுக்கு பேருந்துப் பணிகள் விரிவடைவதனை ஊக்குவிக்கும் நோக்குடன் பாதைஅனுமதி உரிமங்களுக்கு வேறுபட்ட வீதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதேவேளை பயணிகள் பணிகளை முன்னேற்றும் பொருட்டு உயர்ந்தகூரை உள்ள பேருந்துகளையும் 30 இருக்கைகளுக்கு மேற்பட்ட பேருந்துகளையும் தனிப்பட்ட சொந்தக்காரர்கள் கொள்வனவு செய்வதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்துடன் தனிப்பட்ட தொழிற்பாட்டாளர்களினாலும் மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளினாலும் தொழிற்படுத்தப்பட்ட பேருந்துப்பணிகளை சிறந்த முறையில் ஒருங்கிணைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு மாகாணசபைகள் ஊக்குவிக்கப்பட்டன.

தனியார்துறையினால் வழங்கப்பட்ட பயணிகள் பணிகளும் ஆய்விற்குரிய ஆண்டில் மேலும் விரிவடைந்தன. உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்துடன் புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட தனியார் பேருந்துக்களின் (மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து கம்பனிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பேருந்துகள் உட்பட) மொத்த எண்ணிக்கை 1,835இலிருந்து 3,347இற்கு அதிகரித்தது. இது முன்னைய ஆண்டினைவிட 82சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். அதேவேளை ஆய்விற்குரிய ஆண்டில் ஏழு மாகாணசபைகளினாலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினாலும் வழங்கப்பட்ட புதிய பாதை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2,417 ஆக இருந்தது. பேருந்து இறக்குமதி மற்றும் உடற்கோப்பு திட்டத்தின் கீழ் இரு அரச வங்கிகளினாலும் தேசிய அபிவிருத்தி வங்கியினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் மூலம் தனியார் பேருந்து போக்குவரத்துப்பணிகளின் நடவடிக்கைகள் மேலும் வசதியாக்கப்பட்டன.

## புகைவண்டிப் போக்குவரத்து

இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் 1993இலும் 1992இலும் அறிவிக்கப்பட்ட மட்டமான 82 இலட்சம் கிலோமீற்றர்களில் மாற்றமின்றியிருந்தது. தொழிற்பாட்டின் அளவு மாற்றமின்றியிருந்ததென்பது உண்மையெனினும் 1994இல் இலங்கைப் புகைவண்டிப்பகுதியின் பயணிகள் கிலோமீற்றர்கள் 32,300 இலட்சம் கிலோமீற்றர்களாக விளங்கி 15 சதவீதத்தினால் உயர்வடைந்தமை இ.பு. வண்டிப்பகுதியினால் வழங்கப்பட்ட பயணிகள் பணிகளுக்கான அதிகரிக்கின்ற கேள்வியைப் பிரதிபலித்தது. சரக்குத் தொன் கிலோமீற்றர்களின் குறிக்கப்பட்ட பொருள் போக்குவரத்தின் அளவு முன்னைய ஆண்டின் 10 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 1,510 இலட்சத்திற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

ஆய்விற்குரிய ஆண்டில், இ.பு. வண்டிப்பகுதியின் தொழிற்பாட்டு அளவு பல காரணிகளினால் பாதிக்கப்பட்டது. வடக்கிற்கான புகைவண்டிப்பணிகள் மீதான கட்டுப்பாடுகள் கடந்த பல ஆண்டுகளைப் போன்றே தொடர்ந்தது. வடபகுதிப் பாதையில் புகைவண்டிப்பணி தாண்டிக்குளம் வரையில் தொழிற்பட்டவேளையில் தலைமன்னார் பாதையில் எவ்வித புகைவண்டிப்பணிகளும் இடம்பெறவில்லை. கொழும்பு - மட்டக்களப்பு புகைவண்டிப்பணி அதன் நாளாந்தத் தொழிற்பாடுகளை 1994 ஓகத்தில் தொடங்கியது. அதேவேளை நேரந்தவறாமை, மற்றும் போதுமான பணிகள் என்பன தற்போதுள்ள புகைவண்டிப்பாதைகளின் திருப்திகரமற்ற நிலைமையினாலும் பணிகளுக்கான புகைவண்டிப் பெட்டிகள் போதுமானஅளவிற்கு கிடைக்காமையினாலும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டன. பணிகள் மேலும் மோசமடைவதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஆண்டின் இறுதியில் செறிவான போக்குவரத்துப் பிரதேசங்களிலும் நகர்ப்புறப்பகுதிகளிலும் புகைவண்டிப்பாதைகளைப் புத்தாக்கம் செய்வதற்குத் துரிதமான நிகழ்ச்சித்திட்டத்தினை இ. பு. வண்டிப் பகுதி அறிமுகப்படுத்தியது. அத்துடன் இவ்வாண்டுக்காலத்தில் மாத்தறை - கதிர்காமம் புகைவண்டிப் பாதையின் கட்டுமான வேலைகள் நடைபெற்றன. அதன் முதற் கட்டம் மாத்தறைக்கும் வலஸ் கலவிற்குமிடையிலான புகைவண்டிப் பாதையை இடுவதாகும். களனிப்பள்ளத்தாக்குப் பாதையை பாதுக்கை வரை அகலமாக்கும் வேலை ஆண்டின் இறுதியில் அதன் மூன்றாம் கட்டம் தொடங்கியதுடன் முற்றுப் பெற்றுவிட்டது.

1994 இல் இ.பு. வண்டிப்பகுதியின் நடைமுறைச்செலவு ரூ. 16,860 இலட்சத்திற்கு 36 சதவீதத்தினால் அதிகரித்தது. இது முக்கியமாக அதிகரித்த சம்பளப் பட்டியல் மற்றும் திருத்தல், கோரல் என்பனவற்றின் அதிகரித்த செலவுகள் காரணமாக ஏற்பட்டதாகும். ஆய்விற்குரிய ஆண்டிற்கான மொத்த வருமானம் ரூ. 9,000 இலட்சங்களுக்கு 10 சதவீதத்தினால் மாத்திரம் உயர்வடைந்தது. வருமானத்தில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி,நடைமுறைச்செலவினத்தில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக தொழிற்பாட்டு இழப்பு 1993 இன் ரூ.4,160 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994இல் ரூ.7,860 இலட்சமாக விளங்கியது.

முன்மொழியப்பட்டபுகைவண்டி மேலாண்மைச் சபை மீதான சட்ட மூலம் 1993 நவெம்பர் 9ஆம் நாளன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இ.பு. வண்டிப்பகுதியானது புகைவண்டி மேலாண்மைச் சபையாக மாற்றப்படுகையில் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு உலகவங்கி இணங்கியுள்ளது.

## வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும்

1994இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபை 11,076கி.மீற்றர்களைக் கொண்ட வீதி வலையமைப்பினையும் 3,760 பாலங்களையும் பேணியது. வீதி அபிவிருத்தி அதிகார சபை 1994 இல் அதன் வீதிவலையமைப்பு, கட்டுமானம், புத்தாக்கம் முன்னேற்றம் என்பவற்றின் மீது ரூ.29,360 இலட்சத்தினையும் பேணலின் மீது ரூ.1,770இலட்சத்தினையும் செலவிட்டது.

ஆய்விற்குரிய ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை 'ஏ' மற்றும் 'பீ' வகை வீதிகளை உள்ளடக்கிய வீதி வலையமைப்பின் புத்தாக்கம் மற்றும் முன்னேற்றத்தின் மீது அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது வீதி திருத்த செயற்றிட்டத்தின் கீழ் அவிசாவலை - அட்டன் - நுவரெலியா வீதியின் அவிசாவலை - அட்டன் பிரிவு (72.5 கி.மீ) மற்றும் கொழும்பு - இரத்தினபுரி - வெள்ளவாயா - மட்டக்களப்பு வீதியின் கோமகம - இரத்தினபுரிப் பிரிவு (74 கி.மீ. என்பனவற்றின் புத்தாக்க வேலைகள் 1994 இல் தொடர்ந்தன. அதேவேளை பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட மூன்றாவது வீதி செயற்றிட்டத்தின்கீழ் கொழும்பு - காலி - அம்பாந்தோட்டை - வெள்ளவாயா வீதியின் பாணந்துறை காலிப்பிரிவின் (92 கி.மீ) புத்தாக்கம் 1994 இறுதியில் முற்றுப்பெற்றது. இதே செயற்றிட்டத்தின்கீழ் தோப்பு - தங்கொட்டுவ - கிரியுல்லவீதி, கட்டுநாயக்கா - வெயாங்கொட - நித்தம்புவ, சீதுவ-உடுகம்பொல வீதி, பியன்வில்ல - கனேமுல்லவீதி, மற்றும் நீர்கொழும்பிலுள்ள நகரவீதிகள் (மொத்தம் 79.5 கி.மீ) என்பனவற்றின் புத்தாக்க வேலைகள் செயற்பாட்டிலிருந்தன. களுத்துறையிலிருந்து கொழும்பு வரையான காலி வீதிக்கும், சிறீ ஜெயவர்த்தன வீதிக்கும் மாற்றுவழியை வழங்குவதற்காக வாஸ்கடுவ-பண்டாரகம-கெஸ்பாவ வீதியை திருத்துவதற்கான நிர்மாண வேலைகளும் பேலியகொடை - புத்தளம் வீதியில் பேலியகொடையிலிருந்து கட்டுநாயக்கா வரையிலான பிரிவின் புத்தாக்க வேலைகளும் ஆய்விற்குரிய ஆண்டில் தொடர்ந்தன. 1994 இல் புதிய களனிப் பாலத்தின் திருத்த வேலைகள் ரூ. 1,760 இலட்சம் செலவில் முற்றுப்பெற்றன. தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்றிட்டங்களுக்குப் புறம்பாக 1994 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சில புதிய வீதிகள்/பாலங்களின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை தொடங்கியுள்ளது. மகாவலி கங்கைக்கு குறுக்காக லெவெல்ல பாலத்தின் கட்டுமானம் அம்பேபுச - குருநாகல் - திருகோணமலை வீதி அல்லை - கந்தளாய் வீதி மரதங்கடவெல - கபரணை திருக்கொண்டைமடுவீதி என்பனவற்றின் புத்தாக்கம் உறுகொடவத்தை - அம்பத்தல வீதியை அகலமாக்கல் என்பன 1994 இல் தொடங்கப்பட்ட செயற்றிட்டங்களாகும்.

ஆய்விற்குரிய ஆண்டில் புகைவண்டிப்பாதையின் நீளம் 1952 கி. மீற்றராக மாற்றமின்றியிருந்தது. மாத்தறையிலிருந்து வலஸ்கல வரையான 17 கி. மீற்றர் தூரத்தினைக் கொண்ட புதிய பாதையின் நிர்மாண வேலைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. தற்போதுள்ள புகைவண்டிப் பாதைகளின் திருப்திகரமற்ற நிலைகளை முன்னேற்றுவதற்காக ஆண்டின் இறுதிப் பகுதியில் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## வீடமைப்பு

1994இல் பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய அரசதுறை புகலிட நிகழ்ச்சித் திட்டங்களின் நடவடிக்கைகளில் ஒரு மெதுவான போக்குக் காணப்பட்டது. எனினும் தனியார் துறையில் வீடமைப்பு நடவடிக்கைகளின் அபிவிருத்தியின் பொருட்டு முக்கிய வங்கித் தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டின.

---

பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்வரும் பத்து துணை நிகழ்ச்சித் திட்டங்களாவன: கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (கி. வீ.து.நி.தி) நகர்ப்புற வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் (ந.வீ.து. நி.தி.) இடர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (இ.வீ.து.நி.தி) மகாணசபை வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் (மா.வீ.து.நி.தி) மகாவலி வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் (ம.வீ.து.நி.தி) பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் (பெ.வீ.து.நி.தி) கூட்டுறவு வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (கூ.வீ.து.நி.தி) ஊழியர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் (ஊ.வீ.து.நி.தி) தனியாள் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (த.வீ.து.நி.தி) தனியாள் அபிவிருத்தியாளர் துணை நிகழ்ச்சித்திட்டம் (த.அ.து.நி.தி) என்பனவாகும்.

பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்ற பாரிய முகவரான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இரு அரசதுறை புகலிட நிகழ்ச்சித்திட்டங்களான கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டத்தையும் நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டத்தினையும் நேரடியாக பொறுப்பேற்றுள்ளது. கிராமிய, நகரப்பகுதிகளில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் புகலிட நிலைமைகளை முன்னேற்றுவதனையே இவ்விரு நிகழ்ச்சித் திட்டங்களும் இலக்காகக் கொண்டுள்ளன. 1994இல் இவ்விரு துணை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க பின்னடைவினைப் பதிவுசெய்தன. அடையப்பட்ட குடும்பங்களின் நியதிகளில் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நடவடிக்கைகள் 1993இன் 31,368 இலிருந்து 1994இல் 23,911இற்கு வீழ்ச்சியடைந்தன. கட்டிமுடிக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையும் 1993இன் 31,641 இலிருந்து 1994இல் 23,439 இற்கு வீழ்ச்சியடைந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் மற்றும் கொடைகளின் பெறுமதி முன்னைய ஆண்டிலும் பார்க்க 27 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக்காட்டியது. இதே போக்கினைப் பின்பற்றி நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றமும் வழங்கப்பட்ட புதிய கடன்கள் மற்றும் கட்டிமுடிக்கப்பட்ட அலகுகள் என்பனவற்றின் நியதிகளில் குறிப்பிடத்தக்க விதத்தில் மோசமடைந்தது. 1994 இல் நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித்திட்டம் 4,707 குடும்பங்களுக்கு மட்டுமே கொடுகடன் வசதிகளை வழங்கக்கூடியதாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டினைவிட 38 சதவீதங்கொண்டதொரு வீழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டிமுடிக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 1993இன் 5,652இலிருந்து 1994இல் 4,764இற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக நகர்ப்புற வீடமைப்புத்துணை நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதியும் 1993இன் ரூ.3,130இலட்சத்திலிருந்து 1994இல் ரூ. 2,820 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் உதவியளிக்கப்பட்ட அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னடைவிற்கு குறிப்பாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் நிதிகள் கிடைக்காமல் போனமை தாழ்ந்த கடன் மீட்பு வீதங்கள் என்பனவே முக்கிய காரணமாகும். 1994இறுதியில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் உதவியளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கடன்மீட்பு வீதம் 37 சதவீதமாக மாத்திரமே இருந்தது. அதேவேளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை புதிய அரசாங்கத்தின் வீடமைப்புக் கொள்கைகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் புதிய வேலைத்திட்டமொன்றினை வடிவமைத்துள்ளது.

இடர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் முக்கியமாக வடக்குக்கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் புனர் நிர்மாண புத்தாக்க சமூக நலன் புரி அமைச்சின் அனுசரணையின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், வர்த்தகவங்கிகள் மற்றும் அரச முகவர்கள் ஆகியோரினால் இதற்கு உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சித்திட்டமானது 1993இன் 8,538 குடும்பங்களுக்கு வழங்கிய கடன் வசதிகளுடன் ஒப்பிடுகையில் 1994இல் 9,758 குடும்பங்களுக்கு கடன் வசதிகளை வழங்கக்கூடியதாக இருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1994இல் 10,109 வீடமைப்பு அலகுகள் முற்றுப்பெற்றன. அதேவேளை வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில்

மாகாணசபை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாகாணசபைக்கு தொடர்ந்தும் உதவி வழங்கியது. ஆய்விற்குரிய ஆண்டில் மகாணசபை வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் 776 குடும்பங்களை மட்டுமே உள்ளடக்கக்கூடியதாக இருந்து முன்னைய ஆண்டினைவிட 53சதவீத வீழ்ச்சியினைக் கொண்டிருந்தது. ஆய்விற்குரிய ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டிமுடிக்கப்பட்ட அலகுகளின் மொத்த எண்ணிக்கை 934 ஆக விளங்கியது

பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றமும் பின்னடைவினைப்பதிவுசெய்தது. இவ்வாண்டில் தொழிலாளர் வீடமைப்பு மீள்கூரையமைத்தல் திட்டம் மற்றும் சுயஉதவித்திட்டம் என்பவற்றின்கீழ் பெருந்தோட்ட வீடமைப்பு சமூக நலன்புரி நம்பிக்கைப் பொறுப்பு 363 அலகுகளை மாத்திரமே கட்டிமுடிக்கக் கூடியதாக இருந்தது. அதேவேளை, ஆய்விற்குரிய ஆண்டில் மகாவலி வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டத்தின் "பீ" "சி" மற்றும் "எச்" முறைகளில் மகாவலி பொருளாதார முகவரகம் 2,225 வீடமைப்பு அலகுகளைக் கட்டிமுடித்தது.

1994 இல் தனியார்துறையின் வீடமைப்பு கட்டடவாக்க நடவடிக்கைகளின் அபிவிருத்திக்காக முக்கிய வங்கித் தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக்காட்டின. வீடமைப்பிற்கும் தரமுயர்த்துவதற்குமாக வர்த்தக வங்கிகளினாலும் ஏனைய நிதி நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் 1993இன் ரூ.22,120 இலட்சத்திலிருந்து 1994இல் ரூ.27,070 இலட்சத்திற்கு உயர்வடைந்து 22சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. கடந்த ஆண்டைப்போன்றே, இலங்கை வங்கி, மக்கள்வங்கி, அரசஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், தேசிய காப்புறுதிக்கூட்டுத்தாபனம், கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பவற்றின் மூலம் நாடு முழுவதும் கடன்வழங்கல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. 1994இல் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 2,622இற்கு 17 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் கடன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 12,140 இலட்சத்திற்கு 27 சதவீதத்தினால் உயர்வடைந்தன. அரசஈட்டு முதலீட்டு வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 4,474 இற்கு 26சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூ.7,630 இலட்சத்திற்கு 64 சதவீதத்தினால் உயர்வடைந்தது. தேசிய சேமிப்புவங்கியும் 1993இன் 985 விண்ணப்பதாரிகளுக்கு வழங்கிய ரூ. 1,560இலட்சம் கடன்களுக்கெதிராக 1,024 விண்ணப்பதாரிகளுக்கு வீடமைப்பு நோக்கங்களுக்காக ரூ.2,390இலட்சத்தினை வழங்கியது. அதேவேளை 1994இல் மக்கள் வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1993இன் 10,258 இலிருந்து 1994இல் 6,291இற்கு வீழ்ச்சியடைந்தது. கடன்களின் பெறுமதி ரூ.4,140 இலட்சத்திலிருந்து ரூ.2,260 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வீடமைப்புக்கடனின் முக்கிய மூலமாக விளங்குகின்ற வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் 2,738[1] விண்ணப்பதாரிகளுக்கு ரூ. 2,590 இலட்சம் தொகை கொண்ட கொடுகடன் வசதிகளை வழங்கி இது தொடங்கப்பட்டதன் பின்னர் தனியொரு ஆண்டில்

---

[1]பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள இடர் துணை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை இது உள்ளடக்கவில்லை.

## அட்டவணை 1.32

### பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றம் 1990 – 1994 (அ)

| துணை நிகழ்ச்சித் திட்டம் | அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | | | | | முற்றுப்பெற்ற அலகுகளின் எண்ணிக்கை | | | | | பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூ. ப. இ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 (ஆ) | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 (ஆ) | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 (ஆ) |
| கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | 25,496 | 30,429 | 38,710 | 31,368 | 23,911 | 13,655 | 24,071 | 22,846 | 31,641 | 23,439 | 154.6 | 243.4 | 259.5 | 296.2 | 217.7 |
| நகர வீடமைப்பு துணைநிகழ்ச்சித் திட்டம் குறைந்த வருமானக் குடும்பங்கள் | 5,377 | 5,806 | 6,170 | 7,268 | 4,423 | 2,954 | 5,627 | 3,487 | 5,357 | 4,480 | 32.6 | 54.2 | 87.9 | 96.9 | 72.1 |
| நகர (சிறப்பு) நடுத்தர வருமானக் குடும்பங்கள் நிகழ்ச்சித் திட்டம் | - | 16 | 590 | 295 | 284 | - | 16 | 590 | 295 | 284 | - | 222.7 | 211.9 | 215.5 | 210.7 |
| மாகாணசபை வீடமைப்புத்துணை நிகழ்ச்சித் திட்டம் (இ) | 1,070 | 1,422 | 2,141 | 1,639 | 776 | 128 | 1,160 | 1,006 | 1,202 | 934 | 3.9 | 10.0 | 12.9 | 13.5 | 8.4 |
| இடர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (இ) | 15,344 | 14,094 | 13,969 | 8,538 | 9,758 | 3,862 | 6,161 | 9,163 | 7,821 | 10,109 | 99.0 | 142.7 | 169.0 | 256.5 | 205.8 |
| பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (ஈ) | 121 | 313 | 228 | 570 | 363 | 121 | 313 | 228 | 570 | 363 | - | - | - | 7.0 | 7.2 |
| மகாவலி வீடமைப்புத்துணை நிகழ்ச்சித் திட்டம் | 9,751 | 4,721 | 3,505 | 3,735 | 1,188 | (உ) 4,129 | (உ) 3,714 | (உ) 5,968 | (உ) 3,105 | (உ) 2,225 | (ஊ) 31.1 | (ஊ) 15.8 | (ஊ) 25.4 | (ஊ) 14.7 | (ஊ) 5.9 |
| ஊழியர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (இ) | - | - | 249 | 274 | – | - | - | - | 146 | 96 | - | - | 3.6 | 11.7 | 2.3 |
| மொத்தம் | 57,159 | 56,801 | 65,562 | 53,687 | 40,726 | 24,849 | 41,062 | 43,288 | 50,137 | 41,930 | 321.2 | 688.9 | 770.2 | 912.0 | 730.1 |

(அ) பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்வரும் குறிப்பிட்ட சில நிகழ்ச்சித் திட்டங்களை மட்டும் அட்டவணை உள்ளடக்குகின்றது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் செயலாற்றம் மட்டும்.

(ஈ) 1990 – 1992 காலப்பகுதியில் பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் மதோஅ சபைக்கும் இஅபெகூ இற்கும் கீழ் செயற்பட்டது. 1993 இலிருந்து நிகழ்ச்சித்திட்டம் "பெருந்தோட்ட வீடமைப்பு சமூக நலன்புரி பொறுப்பாண்மைக்கு" மாற்றப்பட்டது.

(உ) மகாவலி பொருளாதார முகவராண்மை தேசிய வீடமைப்பு மேலாண்மைச்சபை மற்றும் துணைக் குடும்பங்களால் பொறுப்பேற்கப்பட்ட சொந்தக் கட்டுமானம் என்பனவற்றின்கீழ் முற்றுப்பெற்ற அலகுகள்; 1990 – 1992 இனைப் பொறுத்தமட்டில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் கடன் திட்டத்தின் கீழ் முற்றுப்பெற்ற அலகுகளையும் உள்ளடக்கும்.

(ஊ) மகாவலி பொருளாதார முகவராண்மையினாலும் மகாவலி பொருளாதார முகவரினாலும் புதிய குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட அலகுகள்.

மூலங்கள் : தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
மகாவலி பொருளாதார முகவராண்மை.
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை.
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.
பெருந்தோட்ட வீடமைப்பு, சமூக நலன்புரிப் பொறுப்பாண்மை.

வழங்கப்பட்ட கடன்களின் ஆகக்கூடிய எண்ணிக்கையைப் பதிவு செய்தது. மேலும் ஆய்விற்குரிய ஆண்டில் தனியார்துறை வீடமைப்பு கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கு கூட்டுறவு கிராமிய வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், சிக்கன கொடுகடன் கூட்டுறவு சங்கங்கள் என்பனவும் நிதி உதவிகளை வழங்கின.

## நகர அபிவிருத்தி

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகள் 1994 இல் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தன. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்வேறுபட்ட செயற்றிடங்களின் மீதும் செலவிடப்பட்ட மொத்தத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.10,710 இலட்சத்திற்கு 52 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

மொத்த முதலீட்டில் ரூ.4,820 இலட்சம் அல்லது 46 சதவீதம் பத்தர முல்லையிலுள்ள நிருவாகத் தொகுதியின் கட்டுமானத்தின் மீது செலவிடப்பட்டது. ரூ.4,600 இலட்சங் கொண்டதொகை வாடிக்கையாளரின் சார்பில் பொறுப்பேற்கப்பட்ட செயற்றிட்டங்களின் மீது செலவிடப்பட்டது. இவ்வாண்டில் வாடிக்கையாளரின் சார்பில் பொறுப்பேற்கப்பட்ட முக்கிய செயற்றிட்டங்களாக மாதிவெலவிலுள்ள வீடமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் (ரூ. 1,180 இலட்சம்), பேலிய கொடவிலுள்ள களஞ்சியத் தொகுதி (கட்டம் 2) (ரூ.2,210இலட்சம்) என்பனவிளங்கின. வர்த்தக கட்டடத் தொகுதிகள், நகரமுன்னேற்ற செயற்றிட்டங்கள், கைத்தொழில் கட்டடத்தொகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் மற்றும் சமூக கலாச்சார செயற்றிட்டங்கள் என்பவற்றின் கட்டுமானத்தின் மீது நகர அபிவிருத்திச்சபையினால் ரூ. 600 இலட்சம் கொண்டதொகை செலவிடப்பட்டது. மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காணி வங்கியினால் அபிவிருத்தி குறைந்த அல்லது பயன்படுத்தப்படாத காணிக் கொள்வனவுகளில் மேலும் ரூ.500இலட்சம் கொண்டதொகை செலவிடப்பட்டது.

## தொடர்பூட்டல் பணிகள்

அஞ்சல் துறையுடன் தொடர்பான நடவடிக்கைகள் 1994 இல் மேலும் விரிவடைந்தன. அஞ்சல் திணைக்களத்தினால் கையாளப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 1993இன் 4,860 இலட்சத்திலிருந்து 1994இல் 5,170 இலட்சத்திற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு 1994இல் உள்நாட்டு அஞ்சல்களைக் கையாளுதல் 9 சதவீதத்தினால் 4,490 இலட்சத்திற்கு உயர்வடைந்தமையே பெருமளவிற்கு காரணமாகும். மாறாக, வெளிநாட்டு அஞ்சல்களின் கையாளல் 670 இலட்சத்திற்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1993 இற்கும் 1994 இற்குமிடையே வெளிநாட்டுப் பொதிகளின் கையாளல் 74,000 இற்கு 7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 1994இல் உள்நாட்டுப்பொதிகள் கையாளல் 579,000இற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. அஞ்சல் அலுவலக வலையமைப்பு 1993இன் 4,042 அஞ்சல் அலுவலகங்களிலிருந்து 1994இல் 4,105இற்கு விரிவடைந்தது. இதன்படி அஞ்சல் அலுவலகம் ஒன்று செயலாற்றிய பரப்பளவு1993இன் 16.2 சதுர கிலோமீற்றர்களிலிருந்து 1994இல் 16.0சதுர கி. மீற்றர்களுக்கு சிறிதளவால் குறைவடைந்து பொதுமக்களுக்கு கிடைக்கத்தக்கதாக இருந்த அஞ்சல் பணிகள் அதிகரித்தமையைப் பிரதிபலித்தது.

## அட்டவணை 1.33

### அஞ்சல், தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் வளர்ச்சி 1990 - 1994

| விடயம் | | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 * |
|---|---|---|---|---|---|---|
| 1. அஞ்சல் பணிகள் | | | | | | |
| 1.1 அஞ்சல் வழங்கும் பரப்புக்களின் எண்ணிக்கை | ... | 6,636 | 6,729 | 6,729 | 6,729 | 6,729 |
| 1.2 அஞ்சல் நிலைய பணிக்குட்பட்ட பரப்பு (ச.கி.மீ.) | ... | 16.6 | 16.5 | 16.3 | 16.2 | 16.0 |
| 1.3 அஞ்சல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | ... | 3,945 | 3,982 | 4,018 | 4,042 | 4,105 |
| 1.3.1 அரசு | ... | 3,864 | 3,884 | 3,891 | 3,895 | 3,932 |
| 1.3.2 தனியார் | ... | 81 | 98 | 127 | 147 | 173 |
| 1.4 ஒரு அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை | ... | 4,307 | 4,331 | 4,332 | 4,359 | 4,352 |
| 1.5 குடியிருப்பாளரொருவருக்கு கிடைக்கும் கடிதங்களின் எண்ணிக்கை | .... | 31 | 29 | 27 | 28 | 29 |
| 2. தொலைத் தொடர்பூட்டல் பணி | | | | | | |
| 2.1 உள்நாட்டு தொலைபேசிப் பணி | ... | | | | | |
| 2.1.1 தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை | ... | 121,388 | 125,834 | 135,504 | 157,774 | 180,724 |
| 2.1.2 வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் | ... | 10,241 | 6,579 | 10,607 | 22,270 | 25,322 |
| 2.1.3 இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை | .... | 47,945 | 61,313 | 96,207 | 124,066 | 186,245 |
| 2.1.4 தொலைபேசிக்கான கேள்வி (எண்ணிக்கை) | ... | 169,333 | 187,147 | 231,711 | 281,840 | 366,969 |
| 2.1.5 தொலைபேசிகளின் பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) | ... | 0.71 | 0.73 | 0.78 | 0.90 | 1.01 |
| 2.2 கடல் கடந்த தொலைத் தொடர்பூட்டல் பணி | ... | | | | | |
| 2.2.1 ரெலெக்ஸ் இணைப்புக்களின் எண்ணிக்கை | ... | 1,666 | 1,740 | 1,583 | 1,626 | 1,685 |
| 2.2.2 எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை | ... | 89 | 84 | 103 | 59 | 34 |
| 2.2.3 வெளிச் செல்லும் தொலைத் தொடர்புகள் (எண்ணிக்கை) | ... | | | | | |
| 2.2.3.1 வெளிநாட்டு தொலைபேசித் தொடர்புகள் (அ) | ... | 9,006,000 | 15,599,912 | 17,775,066 | 19,900,000 | 21,600,000 |
| 2.2.3.2 வெளிநாட்டுத் தந்திகள் (ஆ) | ... | 2,720,000 | 2,465,682 | 2,483,002 | 2,220,000 | 2,230,000 |
| 2.2.3.3 வெளிநாட்டு ரெலெக்ஸ் தொடர்புகள் (அ) | ... | 4,472,122 | 4,346,467 | 4,230,994 | 3,300,000 | 3,100,000 |

(அ) எண் தொகைகள் நிமிடங்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.
(ஆ) எண் தொகைகள் சொற்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.
* தற்காலிகமானவை.

மூலங்கள் : அஞ்சல் திணைக்களம், சிறிலங்கா ரெலிகொம்.

இவ்விரு ஆண்டுகளுக்கிடையே வதிபவர் ஒருவருக்கான கடிதங்களின் சராசரி எண்ணிக்கை சிறிதளவு அதிகரிப்பினை மட்டுமே காட்டி விரைவான தொடர்பூட்டல் முறைகளை பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்தியமையை ஓரளவிற்குப் பிரதிபலித்தது.

வழங்கப்பட்ட இயலளவு மற்றும் பணிகள் நியதிகளில் தொலைத் தொடர்பூட்டல்துறை மிதமான முன்னேற்றத்தினைக்காட்டியது. தற்போதுள்ள தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பினை விரிவாக்கி தரமுயர்த்தும் நோக்குடன் சிறீலங்கா ரெலிகொம் பல அபிவிருத்தி செயற்றிட்டங்களை நிறைவேற்றியுள்ளது. இவ்வாண்டில் பொறுப்பேற்கப்பட்ட முக்கிய அபிவிருத்தி செயற்றிட்டங்களாக பன்னாட்டு வலையமைப்பினை முன்னேற்றல், தொலைதூர தொலைக்கடத்தி வலையமைப்பு, கொழும்பு மற்றும் பிரதேசங்களுக்கான பரிவர்த்தனையின் வழங்கலும் நிறுவலும், கொழும்பு பெரும்பாக பிரதேசத்தின் (கட்டம் II) தொலைத்தொடர்பு வலையமைப்பின் முன்னேற்றம், கம்பளை மற்றும் கட்டுநாயக்கா பரிவர்த்தனை பிரதேசத்தின் வலையமைப்பு அபிவிருத்தி, மாத்தறை மாவட்டத்தின் தொலைத் தொடர்பு வலையமைப்பின் அபிவிருத்தி, தென்கிழக்காசிய மத்திய கிழக்கு மேற்கு ஐரோப்பிய கடற்கீழ் கம்பிச் செயற்றிட்டம் (தெ.கி.ஆ-ம.கி-மே.ஐ.2), பரிவர்த்தனைப் புத்தாக்க செயற்றிட்டம், பொதுமக்கள் ஆழித் தொகுதித் தரவு வலையமைப்பு செயற்றிட்டம் என்பன விளங்கின. உலக வங்கியினால் நிதியிடப்பட்ட கொழும்பு மற்றும் பிரதேசங்களுக்கான தொலைபேசி பரிவர்த்தனைகளை வழங்கி நிறுவுவதற்கான செயற்றிட்டத்தின் கீழ் ஆய்விற்குரிய ஆண்டில் தற்போதுள்ள ஆழி வலையமைப்பிற்கு மொத்தமாக 14,800 இணைப்புக்கள் சேர்க்கப்பட்டன.

1994இல் தொலைபேசிகளுக்கான கேள்வி 1993இன் 22 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் 30 சதவீதத்தினால் உயர்வடைந்தது. உட்கட்டமைப்பு முன்னேற்றம் கண்டமையால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் 25,322 இலிருந்து 1994 இறுதியில் 180,774இற்கு குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்தன. கடந்த 10 ஆண்டுகளில் வழங்கப்பட்ட புதிய தொலைபேசிகளின் எண்ணிக்கையில் இதுவே மிக உயர்ந்ததாகும். இதன் விளைவாக 1993இற்கும் 1994இற்குமிடையே தொலைபேசிச் செறிவு (ஒவ்வொரு 100 பேருக்குமானதொலைபேசிகள்) 0.90 இலிருந்து 1.01இற்கு அதிகரித்தது. எனினும் தொலைபேசி வசதிகளுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியுடன் இணைந்து செல்வதற்கு வழங்கல் பக்கத்தில் பற்றாக்குறை காணப்படுவதனை பிரதிபலிக்கின்ற விதத்தில் 1994 இறுதியில் காத்திருப்போர் பட்டியலிலிருந்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 62,179 இனால் 186,245 இற்கு அதிகரித்தது. இதன்படி சிறீலங்கா ரெலிகொம் 1994இறுதியில் நாட்டின் தொலைபேசி வசதிகளுக்கான மொத்தக் கேள்வியில் 49 சதவீதத்தினை மட்டுமே ஈடுசெய்யக்கூடியதாக இருந்தது. அதிகரித்த செலூலர் தொடர்பூட்டல் வசதிகள் தொலைபேசி வசதிகளுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியை ஒரு குறிப்பிட்டளவிற்கு இலகுவாக்கின. "கட்டு, தொழிற்படுத்து, மாற்றல்செய்" என்ற அடிப்படையில் நிறுவப்பட்டு தொழிற்படுத்தப்பட்ட மொபிரெல் எனப்படும் செலூலர் நடமாடும் தொலைபேசிமுறையினால் 1994 இறுதியில் ஏறத்தாள 10,000 தொலைபேசிகளை வழங்கமுடிந்தது. இம்முறையின் கீழ் அடங்கும் பிரதேசங்களாக அநுராதபுரம், இரத்தினபுரி, குருநாகல், குளியாப்பிட்டி, சிலாபம், நீர்கொழும்பு, யா-எல, கொழும்பு, மாத்தறை, களுத்துறை, காலி, மொரட்டுவை, கண்டி என்பன

விளங்கின. அதேவேளை சிறீலங்கா ரெலிகொம் அழைப்பிற்காக காத்திருத்தல், அழைப்பை மாற்றம் செய்தல், குறுக்கப்பட்டசுழற்றும்முறை, மாநாட்டு அழைப்பு போன்றவற்றினை பொதுமக்களுக்கான புதிய துணை வசதிகளாக 1994இல் அறிமுகம் செய்தது.

1994 இறுதியில் ரெலக்ஸ் இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 1,685இற்கு 59ஆல் அதிகரித்தது. கடல் கடந்த மொத்த தொலைபேசி போக்குவரத்து 9 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் கண்டிப் போக்குவரத்து இவ்வாண்டில் சிறிதளவால் வளர்ச்சியடைந்தது. கடல் கடந்த ரெலக்ஸ் தொடர்பு 1994 இல் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## சனசக்தி நிகழ்ச்சித் திட்டம்

1994 இல் சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் நான்காவது சுற்றிலும் ஐந்தாவது சுற்றிலும் மூன்றாவது சுற்றில் எஞ்சியிருந்த சில குடும்பங்களின் மீதும் மையப்படுத்தப்பட்டிருந்தன. நான்காவது சுற்றின் கீழ் இது 25 பிரிவுச் செயலாளர் பிரிவுகளிலுள்ள 100,816 குடும்பங்களை மொத்தமாக உள்ளடக்கியிருந்தது. 1994 யூனுக்குப் பின்னர் 26 பிரிவுச் செயலாளர் பிரிவுகளில் ஐந்தாவது சுற்றுத் தொடங்கியதுடன் மேலும் 119,548 குடும்பங்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டம் விரிவாக்கப்பட்டது. சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் மூன்றாவது சுற்றில் எஞ்சியிருந்த 18,208 குடும்பங்களுக்கும் நன்மைகளை வழங்கியது. இதன்படி, இவ்வாண்டில் சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நுகர்வுப்பொருள் ஆதாரத்திலிருந்து நன்மையடைகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 238,572ஆக விளங்கியது. அதேவேளை சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் இரண்டு சுற்றுக்களையும் நிறைவு செய்த 251,677 குடும்பங்கள் மூலதன உரித்துச் சான்றிதழ் முறையின்கீழ் நன்மைகளைப் பெற்றன.

இவ்வாண்டில் சனசக்தி நன்மை பெறுநர்களுக்கான நுகர்வுப்பொருள் ஆதாரத்தின் பேரில் ஏற்பட்ட செலவு ரூ.28,630இலட்சமாக இருந்தது. 1994இல் சேமிப்புக் கூறின் கீழ் ஏற்பட்ட செலவு ரூ. 13,110 இலட்சமாக விளங்கியது. மூலதன உரித்துச்சான்றிதழ் திட்டத்தின்கீழ் முதலாவது, இரண்டாவது சுற்றின் 251,677 நன்மை பெறுநர்களுக்கான வட்டிக்கொடுப்பனவுகளின் மீதான செலவு ரூ.7,550இலட்சமாகும். இதன்படி, மூன்றாவது நான்காவது மற்றும் ஐந்தாவது சுற்றுக்களின் நடைமுறைப்படுத்தல், மூலதன உரிமைச்சான்றிதழ் உடமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி என்பனவற்றின் பேரில் இவ்வாண்டில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.49,290 இலட்சமாக விளங்கியது.

ஆண்டின், முதலரைப்பகுதியில் மூன்றாம். நான்காம் சுற்றின் நன்மை பெறுநர்கள் சுயதொழில் செயற்றிட்டங்களையும் வருமான உருவாக்க நடவடிக்கைகளையும் தொடங்குவதற்காக ரூ. 2,700 இலட்சங்கொண்ட கொடுகடன் வசதிகளைப் பெற்றனர். இக்கடன்கள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவு கிராமிய வங்கிகள் மற்றும் சனசக்தி வங்கி என்பனவற்றினால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

முந்திய ஆண்டினைப்போன்று சனசக்தி நம்பிக்கை நிதியம் நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள சமூகத்தின் பொருளாதார வாய்ப்பினையும் அவர்களது ஊட்டச்சத்தின் தரத்தினையும் மேம்படுத்துவதற்கான அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. சனசக்தி நம்பிக்கை நிதியம் அதன் நான்கு முக்கிய செயற்றிட்டங்களான சமூகச் செயற்றிட்டம், மனிதவள அபிவிருத்திச் செயற்றிட்டம் கடன்செயற்றிட்டம், ஊட்டச்சத்துச்செயற்றிட்டம் ஆகியவற்றின் கீழ் இவ்வாண்டில் ரூ.6,050 இலட்சத்தினைச் செலவிட்டது. மேலும் 1994 இல் அரசுசார்பற்ற நிறுவனங்கள் அதிகரித்த அளவில் பங்கேற்றதனையும் சனசக்தி நம்பிக்கை நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் எடுத்துக்காட்டின. ஆண்டின் இறுதியில் 2,029 கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் 38,868 நுண் தொழில் முயற்சிகள் மற்றும் சுயதொழில் வாய்ப்புச் செயற்றிட்டங்களும் 324 ஊட்டச்சத்துச் செயற்றிட்டங்களும் சமூக ஒன்றுதிரட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் சனசக்தி, நம்பிக்கை நிதியத்தின் பணிப்பின்கீழ் தொழிற்பாட்டிலிருந்தன.

## சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் அல்லது செழிப்பு இயக்கம் எனப்படும் பெயரில் புதிய வறுமை ஒழிப்பு மற்றும் வருவாய் உருவாக்க நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் எண்ணக் கருவானது குடும்ப அலகுடன் தொடங்கி தேசிய மட்டத்தில் வறுமையை ஒழிப்பதாகும். இதன் மூலம் எய்தப்படவுள்ள குறிக்கோள் என்னவெனில் வறியமக்களை பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஒருங்கிணைத்து கிராமிய, பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் உள்ள குடும்ப மட்டத்திலான பொருளாதார நடவடிக்கைகளை சனசமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் இணைத்து அதிகரித்த வருவாய்க்கும் தொழில் வாய்ப்புகளுக்குமான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதாகும். சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமானது நாட்டில் ஏற்கனவேயுள்ள சனசக்தி நிகழ்ச்சித்திட்டம், உணவு முத்திரை மற்றும் மதிய உணவுத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத்திட்டங்களை அகற்றி அவற்றினிடத்தைப் பற்றிக்கொள்ள உள்ளது.

1995 நடுப்பகுதியில் தொடக்கி வைக்கப்படவுள்ள சமுர்த்தி இயக்கமானது நாட்டின் குடித்தொகையின் மூன்றிலொரு பகுதியினை உள்ளடக்கும். வருமான அளவின் மிகத்தாழ்ந்த மட்டத்தில் உள்ளவர்கள் எனக்கருதப்படும் 12இலட்சம் குடும்பங்களுக்கு இத்திட்டம் நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும். இத்தொகையில் 100,000 குடும்பங்களின் மாத வருமானத்தை ரூ. 1,000/- நேரடி வருவாய் மாற்றலின் மூலம் மாதமொன்றுக்கு ரூ.1,500/- இற்கு உயர்த்துவதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் எதிர்பார்க்கின்றது. மாதமொன்றுக்கு ரூ. 1,000/- வருவாயைக் கொண்டவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ள எஞ்சிய 11 இலட்சம் குடும்பங்களுக்கும் மாதமொன்றுக்கு ரூ.500/- வருமானக் குறைநிரப்புத்தொகையாக வழங்கப்படும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவாக வறிய குடும்பங்களின் வருமானம் மாதமொன்றிற்கு ஏறக்குறைய 1,500/- இற்கு உயர்த்தப்படும். சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் சுயதொழில் நடவடிக்கைகளினால் உருவாக்கப்படும் மேலதிக வருமானத்துடன் இந்த வருவாயானது மாதமொன்றுக்கு ரூ.2,000/- இற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல், வருவாய் உருவாக்க சுயதொழில்களின் அபிவிருத்தி என்பவற்றின் அடிப்படையில் சுய நம்பிக்கையினை மேம்படுத்துவதாகும். சிக்கன சேமிப்பு பழக்கத்தை விருத்தி செய்யும் நோக்கில் அனைத்து சமுர்த்தி நன்மை பெறுநர்களும் தமது வருவாய்க் குறைநிரப்புத் தொகையின் பாகமொன்றினை அதாவது மிக வறியோர் மாதாந்தம் ரூ. 200/- இனையும் ஏனையோர் ரூ.100/- இனையும் சேமிக்கும்படி ஊக்குவிக்கப்படுவர். இத்தகைய சேமிப்புக்கள் வெளியிலிருந்தான குறைநிரப்பு நிதியிடலுடன் இணைந்து நன்மை பெறுநர்களுக்கு புதிய வருவாய் உருவாக்க நடவடிக்கைகளை நிதியிடப் பயன்படுத்தப்படும். அதேவேளை ஆற்றல் மிக்க மற்றும் நீண்டகால வருமான உருவாக்க நடவடிக்கைகளைக் கொண்டவர்களென இனங்காணப்பட்ட சமுர்த்தி நன்மை பெறுநர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கான சமுர்த்தி கொடுப்பனவுகளை ரூ.25,000/- இலிருந்து ரூ.50,000/ - வரையிலான வீச்சிலமைந்த தனியொரு மூலதனக் கொடுப்பனவாக மாற்றக் கூடிய விருப்புத்தேர்வு அளிக்கப்படும். சமமான தொகையிலான கடன் ஒன்றினால் இதனை குறைநிரப்ப முடியும்.

தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு நன்மை பெறுநர்களின் வருவாய் ரூ.2,000/- இனை விஞ்சுமாயின் அல்லது குடும்பத்தின் உறுப்பினர் ஒருவராயினும் தொழில் வாய்ப்பினைப் பெறுவாராயின் அந்தக் குடும்பம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து வெளியேற்றப்படும். சில நன்மை பெறுநர்கள் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து வெளியேறும் போது புதிய ஆட்களுக்கு நிகழ்ச்சித்திட்டத்தில் சேருவதற்கு இயலுமாக இருக்கும்.

வறியதும் மற்றும் பொருளாதார மீட்சியை வேண்டி நிற்பதுமான ஒவ்வொரு குடும்ப அலகினையும் எய்தும் வகையில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிருவாக அமைப்பு மத்தியிலிருந்து புற எல்லை வரை விரிவாக்கப்படும். இந்த நோக்கத்திற்காக அரசினால் சமுர்த்தி அதிகார சபையொன்று நிறுவப்படும். இது சமுர்த்தி இயக்கத்தின் நிறைவேற்று மற்றும் நிருவாக அலகாக அமையும். சமுர்த்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஏனைய ஏதேனும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பாக உள்ள மாவட்ட சமுர்த்தி குழுக்களின் மூலமாக அதனது நடவடிக்கைகளை தொழிற்படுத்தும்படி இவ்வதிகாரசபை எதிர்பார்க்கப்படுகின்றது. சமுர்த்தி ஆணையாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதோடு "சமுர்த்தி நியாமக்க" அல்லது வழிகாட்டியாக தொழிற்படுவதற்கு க.பொ.த (சா.த) சித்தியெய்தியுள்ள ஏறத்தாழ 40,000 வேலையற்ற இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கும்படி அவர் கேட்டுக்கொள்ளப்படுவார். பங்கேற்பு, இனங்காணல், செயல் அளவீடு முறையின் அடிப்படையில் கிராம மக்களின் குடும்ப நிலைமை பற்றிய அளவீடு ஒன்றினை நடாத்தும்படி வழிகாட்டிகள் எதிர்பார்க்கப்படுவர். இந்த அளவீடானது குடும்பத் தேவைப்பாடுகளை இனங்கண்டு உள்ளார்ந்த திறமைகள் தேர்ச்சிகள் மற்றும் கிடைக்கத்தக்க மூலவளங்கள் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்க உதவும்.

**நலத்துறை**

*1994இல் அரசு ரூ.91,850 இலட்சங்கொண்ட மொத்தத் தொகையினை அல்லது அதன் மொத்தச் செலவில் 5 சதவீதத்தினை நலப்பணிகளில் செலவிட்டது. இது முந்திய ஆண்டினதைவிட 30 சதவீதம் கூடுதலானதாகும். சார்பு ரீதியில் மொத்த உற்பத்தியில் அதன் பங்கு 1993இன் 1.4 சதவீதத்திலிருந்து 1994இல் 1.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. 1994இல் நலத்துறை மீதான நடைமுறைச் செலவு ரூ. 76,660 இலட்சத்திற்கு 34 சதவீதத்தால் உயர்வடைந்த வேளையில் மூலதனச் செலவு ரூ 15,190 இலட்சத்திற்கு 12 சதவீதத்தால் உயர்வடைந்தது. அதேவேளை குணமாக்கல் மற்றும் நோய்த்தடுப்புப் பணிகளிலுள்ள வைத்திய அலுவலர்களின் எண்ணிக்கை 1993 இல் ஒவ்வொரு 100,000 பேருக்கும் 21 அலுவலர்களிலிருந்து 1994 இல் ஒவ்வொரு 100,000 பேருக்கும் 22 அலுவலர்களுக்கு சிறிதளவால் அதிகரித்தது. மருத்துவ தாதிகளின் எண்ணிக்கையும் ஒவ்வொரு 100,000 பேருக்கும் 67 இலிருந்து 74 இற்கு அதிகரித்தது.*

*முந்திய ஆண்டினைப் போன்று 1994 இலும் நலத்துறைக் கொள்கைகள் குடித்தொகையின் நலத்தை மேம்படுத்தல், நோய்களைத்தடுத்தலும் கட்டுப்படுத்தலும் ஏற்கெனவே உள்ள பணிகளின் தரத்தினை உயர்த்துதல் என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தன. ஆய்விற்குரிய ஆண்டில் நலத்துறைக் கொள்கைகள் பணிகள் குறைவாகச் சேவை வழங்கப்பட்ட பிரதேசங்களுக்கு வசதிகளைக் குறைவாகப் பெறும் மக்கள் தொகுதிக்குமான வசதிகளை அபிவிருத்தி செய்வதனை மையமாகக் கொண்டிருந்தன. நோயாளர் பராமரிப்பு பணிகளை பலப்படுத்துவதனையும் சமூக நலப்பணிகளை மேம்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டு வெளிநாட்டு உதவியுடன் 1994இல் நலத்துறை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக சிறப்பான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் செயற்றிட்டங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது நலத்துறை குடித்தொகைச் செயற்றிட்டம், பஅஅ/ உலக வங்கியினால் நிதியிடப்பட்ட நலத்துறை மற்றும் குடும்பத்திட்ட செயற்றிட்டம், பினிடாவினால் நிதியிடப்பட்ட பொது மருத்துவமனையின் அபிவிருத்தி, சீன அரசினால் நிதியிடப்பட்ட லேடி றிச்வே மருத்துவமனையின் அபிவிருத்தி என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.*

*தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தல், சுகாதாரமேம்பாடு, கொள்ளை நோய்க்காப்பு, குடும்ப நலத்துறை மேம்பாடு என்பவற்றை உள்ளடக்கிய சமூக நலப்பணிகளை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 1994இல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. யப்பானிய மூளை வீக்கம், டிங்கு குருதிப்போக்குக் காய்ச்சல் என்பவற்றின் நிகழ்வுகள் 1994இல் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. உலக சுகாதார நிறுவனத்தினால் விதந்துரைக்கப்பட்ட "புதிய உலகளாவிய மலேரியாக் கட்டுப்பாட்டு உத்தியுடன்" இணைந்த வகையில் மலேரியாக்கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1994இல் கிரமமான உள்ளக மருந்து தெளிப்பு முறைகள், நேரகாலத்துடன் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளைப் பலப்படுத்தல், கிருமிநாசம் செய்யப்பட்ட படுக்கை வலையைப் பாவித்தல் போன்ற தற்பாதுகாப்பு முறைகளை மேம்படுத்தல், நலத்துறைக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரித்தல் போன்றவற்றை*

## அட்டவணை 1.34

### நலத்துறைப் பணிகள் 1990 - 1994

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994* |
|---|---|---|---|---|---|
| 1. மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருந்து கையாள்பவை) ... | 502 | 504 | 506 | 504 | வி.கி. |
| 2, படுக்கைகள் ... | 42,079 (ஆ) | 42,437 (ஆ) | 48,061 | 48,949 | வி.கி. |
| 3. மத்திய மருந்தகங்கள் ... | 278 (ஆ) | 275 (ஆ) | 350 | 365 | வி.கி. |
| 4. மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை ... | 2,440 (அ) | 2,934 | 3,345 | 3,713 | 3,967 |
| 5. துணை மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை ... | 1,074 (அ) | 1,201 | 1,253 | 1,305 | 1,298 |
| 6. ஆயுர்வேத மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை ... | 13,284 | 12,852 | 13,131 | 13,454 | 13,562 |
| 7. மருத்துவத் தாதிமாரின் மொத்த எண்ணிக்கை ... | 8,957 (அ) | 9,934 | 11,214 | 11,818 | 13,142 |
| 8. உடன் கவனிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை ... | 5,707 | 5,697 | 5,710 | 5,772 | 5,469 |
| 9. உள்நோயாளர்களின் எண்ணிக்கை ('000) ... | 2,533 (ஆ) | 2,629 (ஆ) | 3,023 | 3,174 | வி.கி. |
| 10. வெளி நோயாளர்களின் எண்ணிக்கை ('000) ... | 28,401 (ஆ) | 28,575 (ஆ) | 36,827 | 36,892 | வி.கி. |
| 11. மொத்த நலத்துறைச் செலவு (ரூ. ப. இ.) ... | 4,964 | 5,229 | 6,541 | 7,064 | 9,185 |
| (அ) நடைமுறைச் செலவு (ரூ. ப. இ.) ... | 3,685 | 4,110 | 4,518 | 5,711 | 7,666 |
| (ஆ) மூலதனச் செலவு (ரூ. ப. இ.) ... | 1,279 | 1,119 | 2,023 | 1,353 | 1,519 |

(அ) வடமாகாணம் நீங்கலாக
(ஆ) வடக்குக் கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக.
* தற்காலிகமானவை

மூலங்கள் : நலத்துறை, நெடுஞ்சாலைகள், சமூகப் பணிகள் அமைச்சு,
சுதேச மருத்துவ அமைச்சு,
இலங்கை மத்திய வங்கி.

மேற்கொள்வதன் மூலம் மலேரியாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக மலேரியாவின் மொத்த நிகழ்வு 1993இன் 363,197 இலிருந்து 1994இல் 259,221 ஆகக் கணிசமாகக் குறைவடைந்தது.

**கல்வி**

1994இல் அரசு ரூ. 18 பில்லியன் அல்லது அதன் மொத்த செலவில் 11 சதவீதத்தினைக் கல்வியில் செலவிட்டது. இது முந்திய ஆண்டில் செலவிடப்பட்ட தொகையினைவிட 26 சதவீதம் கூடுதலானதாகும். மொ உ உ இல் கல்வி மீதான செலவின் பங்கு 1993 இன் 2.8 சதவீதத்திலிருந்து 1994இல் 3.1 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. ஆய்வுக்குரிய ஆண்டில் கல்வி மீதான மூலதனச் செலவு ரூ. 28,770 இலட்சமாக அமைந்து 1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கல்வி 28,770 மீதான நடைமுறைச் செலவும் 1994இல் 32 சதவீதத்தால் ரூ. 148,360 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. இது பகல் உணவு, பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்கள், பள்ளிக்கூட பருவகாலப் பயணச் சீட்டுக்கள் இலவச பள்ளிக்கூடச் சீருடைகள் என்பவற்றை வழங்குவதற்காகச் செலவிடப்பட்ட ரூ.35,940இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தது. 10,760 பள்ளிக்கூடங்களிலிருந்து மொத்தமாக 43 இலட்சம் பள்ளிச் சிறார்கள் இந் நிகழ்ச்சித்திட்டங்களினால் நன்மையடைந்தனர்.

மொத்தப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 1993இன் 10,710இலிருந்து 1994இல் 10,760இற்கு அதிகரித்தது. பள்ளிக்கூடங்களில் மாணவர்தொகை 1993இன் 4,303,493 இலிருந்து 1994இல் 4,312,508இற்கு அதிகரித்தது. இதன் விளைவாக பாடசாலை ஒன்றிற்கான மாணவர்களின் எண்ணிக்கை 1993இன் 402இலிருந்து 1994இல் 401இற்குக் குறைவடைந்தது. இதேவேளை ஆய்விற்குரிய ஆண்டில் 2,645 ஆசிரியர்கள் கல்விப் பணியில் சேர்க்கப்பட்டதன் மூலம் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 195,243ஆக உயர்வடைந்தது. இதன் விளைவாக மாணவர் ஆசிரியர் விகிதாசாரம் 1993 இன் 22.3 இலிருந்து 1994இல் 22.1 இற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. கல்விப்பணியினை ஒழுங்குபடுத்துவதன் நோக்குடன் 1994இல் ஆசிரியர் கல்விப்பணி ஏற்படுத்தப்பட்டது.

1994 இல் கிராமப் பிரதேசங்களில் கல்வி சார்ந்த உட் கட்டமைப்பினை மேம்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம் பொதுக்கல்விச்செயற்றிட்டம், ஆரம்பப்பள்ளிக்கூட அபிவிருத்திச் செயற்றிட்டம், பெருந் தோட்டப்பள்ளிக்கூட கல்வி அபிவிருத்திச்செயற்றிட்டம், சேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்புச்செயற்றிட்டம், பிரதேசவாரியாக பள்ளிக்கூடங்களை மேம்படுத்தல் போன்றவை கிராமியக் கல்வியின் உட்கட்டமைப்பினை விரிவுபடுத்துவதற்காக 1994இலும் தொடரப்பட்ட சில வெளிநாட்டு நிதியிடலைப் பெற்ற செயற்றிட்டங்களாகும். தேசிய பள்ளிக்கூட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் 1994 இறுதியில் மொத்தமாக 160 பள்ளிக்கூடங்கள் தேசிய பள்ளிக்கூடத் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டன. இச்செயற்றிட்டம் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு பள்ளிக்கூடத்தையாவது நிறுவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

## அட்டவணை 1.35

## பொதுக்கல்வி 1990 - 1994

| விடயம் | | 1990 | 1991 | 1992 | 1993 | 1994* |
|---|---|---|---|---|---|---|
| 1. பள்ளிக்கூடங்களின் மொத்த எண்ணிக்கை | ... | 10,382 | 10,520 | 10,588 | 10,710 | 10,760 |
| 1.1 அரச பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை | ... | 9,864 | 9,998 | 10,042 | 10,160 | 10,193 |
| 1.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் | ... | 518 | 522 | 546 | 550 | 567 |
| 2. மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 4,232,356 | 4,258,697 | 4,286,275 | 4,303,493 | 4,312,508 |
| 2.1 அரச பள்ளிக்கூடங்கள் | ... | 4,111,272 | 4,135,114 | 4,156,254 | 4,172,897 | 4,197,642 |
| 2.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் | ... | 121,084 | 123,583 | 130,021 | 130,596 | 114,866 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் | ... | 387,314 | 388,315 | 359,003 | 354,390 | 339,006 |
| 4. ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 184,822 | 177,231 | 182,756 | 193,924 | 195,243 |
| 4.1 அரச ஆசிரியர்கள் | ... | 178,333 | 170,735 | 175,813 | 186,926 | 187,937 |
| 4.2 ஏனையோர் | ... | 6,489 | 6,496 | 6,943 | 6,998 | 7,306 |
| 5. மாணவர் / ஆசிரியர் விகிதம் | ... | 22.9 | 24.0 | 23.5 | 22.2 | 22.1 |
| 6. கல்வி மீதான மொத்தச் செலவினம் (ரூ. ப. இ) (அ) | ... | 9,571 | 9,129 | 12,541 | 14,070 | 17,713 |
| 6.1 நடைமுறை | ... | 8,529 | 7,951 | 10,533 | 11,225 | 14,836 |
| 6.2 மூலதன | ... | 1,042 | 1,178 | 2,008 | 2,845 | 2,877 |

மூலங்கள் : கல்வி உயர்கல்வி அமைச்சு,
இலங்கை மத்திய வங்கி.

* தற்காலிகமானவை

(அ) உயர்கல்வி மீதான அரசின் செலவையும் உள்ளடக்குகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரை 1988,1989ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகங்கள் இரு ஆண்டுகள் மூடப்பட்டிருந்தமை காரணமாகத் தாமதிக்கப்பட்ட 1992/93 ஆம் கல்வி ஆண்டு 1994இல் ஆரம்பித்தது. ஆய்விற்குரிய ஆண்டில் 8,540 புதிய மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட வேளையில் மொத்தமாக 5,368பேர் பட்டம் பெற்றனர். கலை, வர்த்தகம், முகாமைத்துவக் கல்வி ஆகிய பீடங்களுக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்ட மாணவர்தொகை 4,369 ஆக அமைந்த வேளையில் விஞ்ஞானம், பொறியியல், மருத்துவ பீடங்களுக்குச் சேர்க்கப்பட்டவர்கள் தொகை 3,370 ஆகவிருந்தது. 1994 இறுதியில் ஒன்பது முதன்மை பல்கலைக்கழகங்களிலும் இருந்த மாணவர் தொகை 30,764 ஆகும். ஒன்பது பல்கலைக்கழகங்களினதும் கல்வி அலுவலர்களின் பலம் 1993இன் 2,090இலிருந்து 1994இல் 2,319 இற்குச் சிறிதளவு அதிகரித்தது. இதன் விளைவாக மாணவர் ஆசிரியர் விகிதம் 1993இன் 15 இலிருந்து 1994இல் 13இற்கு முன்னேறியது. 1994இல் திறந்த பல்கலைக்கழகங்களுக்கு மொத்தமாக 11,314 மாணவர்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டனர். இதன் விளைவாக 1994 இறுதியில் திறந்த பல்கலைக்கழகங்களுக்கு சேர்க்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 20,022 இற்கு அதிகரித்தது. திறந்த பல்கலைக்கழகங்களின் மொத்த ஆசிரியர்களின் பலம் 1993இன் 355இலிருந்து 1994இல் 382இற்கு அதிகரித்தது.

## மகாவலி நிகழ்ச்சித் திட்டம்

மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் வேளாண்மையாளர் மற்றும் வேளாண்மையாளர் அல்லாத குடும்பங்களின் குடியமர்த்தல் நடவடிக்கைகள் 1994இலும் தொடர்ந்தன. 1994இல் மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவினம் 1993இல் செலவிடப்பட்ட ரூ.26,420 இலட்சத்திற்கெதிராக ரூ.18,880இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் ஏற்பட்ட செலவினம் 1994 இற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கில் 96 சதவீதத்திற்கு வகைகூறியது. மொத்தச் செலவினத்தில் 61 சதவீதம் அல்லது ரூ. 11,560இலட்சம் முறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதாவது முறை ("பீ" ரூ.5,280 இலட்சம்), முறை "சி" (ரூ.3,760இலட்சம்), முறை "எச்" (ரூ.950இலட்சம்), முறை "எல்" (ரூ.1,570 இலட்சம்) என்பவற்றின் மீது செலவிடப்பட்டது.

1993இல் 22சதவீதத்தினால் அதிகரித்த மகாவலி செயற்றிட்டத்தின்கீழ் வரும் நீர்மின்வலுப் பொறிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த வலுத் தொகை 1994இல் 2,207 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு 16 சதவீதங்கொண்ட மேலுமொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. நீரேந்து பிரதேசங்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளும் இத்திருந்திய செயலாற்றத்திற்கு உதவின. 1993இல் பழுதுபார்த்தலுக்காக மூடப்பட்டிருந்த போவத்தன்ன வலுப்பொறி 1994 ஏப்பிறலில் மீண்டும் தொழிற்படத்தொடங்கியதுடன் 38 கிகாவாட் மணித்தியாலங்களை உருவாக்கியது. உக்குவெல வலுப்பொறி நீங்கலாக மற்றைய அனைத்து வலுப்பொறிகளினதும் செயலாற்றம் முன்னைய ஆண்டினைக்காட்டிலும் 1994இல் சிறப்பானதாக இருந்தது. 1993இல் 87 சதவீதத்தினால் உயர்வடைந்த இரந்தெனிகலவில் உருவாக்கப்பட்ட வலு 1994 இல் 468 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு உயர்ந்து 27 சதவீதமான மேலுமொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. விக்டோரியா, கொத்மலை, இரந்தம்பே ஆகியவற்றில் உருவாக்கப்பட்ட வலுவும் முறையே 12

## அட்டவணை 1.36

### மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாகப் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு

(எக்டேயர்கள்)

| விடயம் | பெரும் போகம் 1990/91 | சிறு போகம் 1991 | மொத்தம் 1991 | பெரும் போகம் 1991/92 | சிறு போகம் 1992 | மொத்தம் 1992 | பெரும் போகம் 1992/93 | சிறு போகம் 1993 | மொத்தம் 1993 | பெரும் போகம் 1993/94(அ) | சிறு போகம் 1994 (அ) | மொத்தம் 1994 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முறை 'எச்' | 31,385 | 19,806 | 51,191 | 31,931 | 4,312 | 36,243 | 33,390 | 11,660 | 45,050 | 33,481 | 22,996 | 56,477 |
| நெல் | 29,392 | 9,176 | 38,568 | 29,294 | 1,262 | 30,556 | 29,117 | 2,291 | 31,408 | 29,950 | 11,205 | 41,155 |
| ஏனைய பயிர்கள் | 1,993 | 10,630 | 12,623 | 2,637 | 3,050 | 5,687 | 4,273 | 9,369 | 13,642 | 3,531 | 11,791 | 15,322 |
| முறை 'பீ' | 11,551 | 10,347 | 21,898 | 11,786 | 11,221 | 23,007 | 13,591 | 12,594 | 26,185 | 20,174 | 17,908 | 38,082 |
| நெல் | 10,912 | 9,837 | 20,749 | 11,175 | 10,624 | 21,799 | 12,513 | 11,956 | 24,469 | 18,321 | 16,007 | 34,328 |
| ஏனைய பயிர்கள் | 639 | 510 | 1,149 | 611 | 597 | 1,208 | 1,078 | 638 | 1,716 | 1,853 | 1,901 | 3,754 |
| முறை 'சி' | 19,026 | 15,687 | 34,713 | 18,599 | 15,934 | 34,533 | 21,521 | 19,976 | 41,497 | 23,868 | 20,148 | 44,016 |
| நெல் | 15,632 | 15,008 | 30,640 | 16,760 | 15,098 | 31,858 | 19,289 | 19,089 | 38,378 | 20,256 | 19,427 | 39,683 |
| ஏனைய பயிர்கள் | 3,394 | 679 | 4,073 | 1,839 | 836 | 2,675 | 2,232 | 887 | 3,119 | 3,612 | 721 | 4,333 |
| முறை 'ஜி' | 5,063 | 4,668 | 9,731 | 5,180 | 174 | 5,354 | 5,414 | 3,732 | 9,146 | – | – | – |
| நெல் | 5,017 | 2,613 | 7,630 | 4,959 | 117 | 5,076 | 5,096 | 2,269 | 7,365 | – | – | – |
| ஏனைய பயிர்கள் | 46 | 2,055 | 2,101 | 221 | 57 | 278 | 318 | 1,463 | 1,781 | – | – | – |
| முறை 'எல்' | 1,071 | 152 | 1,223 | 1,451 | 65 | 1,516 | 1,095 | 82 | 1,177 | 1,135 | 148 | 1,283 |
| நெல் | 700 | 84 | 784 | 824 | - | 824 | 684 | 42 | 726 | 705 | 139 | 844 |
| ஏனைய பயிர்கள் | 371 | 68 | 439 | 627 | 65 | 692 | 411 | 40 | 451 | 430 | 9 | 439 |
| மொத்தம் | 68,096 | 50,660 | 118,756 | 68,947 | 31,706 | 100,653 | 75,011 | 48,044 | 123,055 | 78,658 | 61,200 | 139,858 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை

சதவீதத்தினாலும் 14 சதவீதத்தினாலும் 19 சதவீதத்தினாலும் 819 கிகாவாட் மணித்தியாலத்திற்கும் 512 கிகாவாட் மணித்தியாலத்திற்கும் 224 கிகாவாட் மணித்தியாலத்திற்கும் உயர்வடைந்தன. விக்டோரியா, கொத்மலை, இரந்தெனிகல், இரந்தம்பே என்பன இத்திட்டம் தொடங்கியதன் பின்னர் எந்தவொரு குறிப்பிட்ட ஆண்டிலும் பதிவுசெய்யப்பட்டதனைவிட மிக உயர்ந்த உருவாக்கத்தினைப் பதிவுசெய்தன. மாறாக உக்குவெலவில் உருவாக்கப்பட்ட வலு 146 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வரும் ஆறு வலுப் பொறிகளினாலும் உருவாக்கப்பட்ட வலு 1993இல் பதிவுசெய்யப்பட்ட 48 சதவீதத்திற்கெதிராக 1994இல் தேசிய வலுத் தொகுதியின் மொத்த வழங்கலில் 51சதவீதத்திற்கு வகைகூறியது.

**அட்டவணை 1.37**

**மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியேற்றம்**
**('எச்,' 'சி,' 'பீ' 'ஜி,' 'எல்' முறைகள்)**

குடும்பங்களின் எண்ணிக்கை

| ஆண்டு | முறை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | 'எச்' | 'சி' | 'பீ' | 'ஜி' | 'எல்' | |
| 1976 ... ... | 2,383 | – | – | – | – | 2,383 |
| 1977 ... ... | 3,141 | – | – | – | – | 3,141 |
| 1978 ... ... | 2,754 | – | – | – | – | 2,754 |
| 1979 ... ... | 5,290 | – | – | – | – | 5,290 |
| 1980 ... ... | 7,407 | – | – | – | – | 7,407 |
| 1981 ... ... | 2,389 | 2,777 | – | – | – | 5,166 |
| 1982 ... ... | 1,449 | 2,683 | 1,918 | – | – | 6,050 |
| 1983 ... ... | 1,077 | 1,988 | 1,938 | 1,319 | – | 6,322 |
| 1984 ... ... | 1,956 | 1,992 | 1,381 | 446 | – | 5,775 |
| 1985 ... ... | 44 | 823 | 3,423 | 1,045 | – | 5,335 |
| 1986 ... ... | 780 | 2,151 | 1,260 | 583 | – | 4,774 |
| 1987 ... ... | 182 | 1,407 | 857 | 274 | – | 2,720 |
| 1988 ... ... | 14 | 1,081 | 656 | 85 | 3,270 | 5,106 |
| 1989 ... ... | 9 | 1,008 | 324 | 1,305 | 94 | 2,740 |
| 1990 ... ... | 1,680 | 3,427 | 3,492 | 366 | – | 8,965 |
| 1991 ... ... | 1,151 | 3,240 | 1,468 | 126 | – | 5,985 |
| 1992 ... ... | 754 | 2,005 | 1,716 | 6 | – | 4,481 |
| 1993 ... ... | 283 | 1,500 | 3,190 | – | – | 4,973 |
| 1994 (அ) ... ... | 30 | 332 | 841 | – | – | 1,203 |
| மொத்தம் | 32,773 | 26,414 | 22,464 | 5,555 | 3,364 | 90,570 |

(அ) தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை

1993இல் 22 சதவீதத்தினால் உயர்வடைந்த மகாவலி ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தின் கீழ் பயிர்செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1994இல் 139,858 எக்டேயர்களுக்கு உயர்ந்து 14 சதவீதம் கொண்ட மேலுமொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இருபருவ காலங்களிலும் பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கள் அதிகரித்தன. 1993/94 பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கள் முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 78,658 எக்டேயர்களுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை 1993 சிறுபோகத்தில் 52சதவீத உயர்வினைப் பதிவுசெய்த பயிரிடப்பட்ட பரப்பு 1994 சிறுபோகத்தில் 61,200 எக்டேயர்களுக்கு உயர்ந்து 27 சதவீதம் கொண்ட மேலுமொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 1994 இன் பயிர்ச்செய்கை ஆண்டில் மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் நெற்செய்கையின் கீழான மொத்த நிலப்பரப்பு 116,010 எக்டேயர்களுக்கு 13 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை முன்னைய ஆண்டில் 96சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்த ஏனைய பயிர்களின் கீழான நிலப்பரப்பு 1994இல் 23,848 எக்டேயர்களுக்கு 15சதவீதத்தினால் மேலும் உயர்வடைந்தது.

மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டில் குடியமர்த்தப்பட்ட 4,973 குடும்பங்களுக்கெதிராக 1994இல் 1,203 குடும்பங்களாக விளங்கியது.1976இல் தொடங்கிய மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கிய பின்னர் எந்தவொரு குறிப்பிட்ட ஆண்டிலும் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை இதுவேயாகும். இதில் 841 குடும்பங்களும் 332 குடும்பங்களும் முறையே முறைகள் "பீ" யிலும் முறை "சி" யிலும் குடியமர்த்தப்பட்டன. 1994 இறுதியில் மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 90,570 ஆகும்.

## ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்தி

முக்கிய நீர்ப்பாசன நடவடிக்கைகளான கிருண்டிஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் கட்டம் II, மினிப்பே நாகதீப நீர்பாசன புத்தாக்க செயற்றிட்டம், வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டம், தேசிய நீர்ப்பாசன புத்தாக்க செயற்றிட்டம் என்பன மீதான வேலைகள் 1994இலும் தொடர்ந்தன. நீர்பாசனத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின் படி மேற்குறிப்பிடப்பட்ட செயற்றிட்டங்களின் மீது 1994இல் ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூ. 4,300 இலட்சமாக அமைந்ததுடன் இது 1993 இல் ஏற்பட்ட ரூ.3,440 இலட்சத்தினைவிட 25சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகவும் இருந்தது. தொடர்பான ஆண்டில் மூன்று முக்கிய நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களான கிருண்டிஓயா நீர்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் கட்டம் I, கிராம நீர்ப்பாசன புத்தாக்க செயற்றிட்டம், நில்வளகங்கை வெள்ளப்பாதுகாப்பு திட்டம் கட்டம் II ஆகியன அவற்றின் நடவடிக்கைகளை முடித்துக் கொண்டன.

1994இல் கிருண்டிஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் கட்டம் II இன் மீதான செலவினம் ரூ.600 இலட்சமாக விளங்கியதன் மூலம் ஆண்டின் இறுதியில் இச்செயற்றிட்டத்தின்மீது ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூ. 6,920 இலட்சமாகியது.

அட்டவணை 1.38

**தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான செலவு**

| செயற்றிட்டம் | உதவியின் மூலங்கள் | மொத்த வெளிநாட்டு உதவியின் கடப்பாடு (ப.இ.) | 1993 இன் உண்மையான செலவு (ரூ.ப.இ.) | 1994* இன் செலவு (ரூ.ப.இ.) | 1994* இறுதி வரை ஒன்று சேர்ந்த செலவு (ரூ.ப.இ.) |
|---|---|---|---|---|---|
| 1. கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்றிட்டம் (கி.ஓ.நீ.கு.செ.) கட்டம் II | ஆ.அ.வ. | சிஎஉ 22 | 119 | 60 | 691 |
| 2. மினிப்பே-நாகதீப நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் | யப்பான் | யென் 1,295.0 | 63 | 190 | 416 |
| 3. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டம் | ஐ.ச.ஆ. | ஈசீயு 6.3 | 21.5 | 22.8 | 122.8 |
| 4. தேசிய நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் (தே.நீ.பு.செ.) | ப.அ.அ<br>ஐ.ச.ஆ. | ரூபா. 1,406.9<br>ரூபா. 1,622.6 | 140.41 | 157.40 | 348.01 |

* தற்காலிகம். மூலம் : நீர்ப்பாசனத் திணைக்களம்

வடமேல் மாகாணத்திலுள்ள சிறப்பு நீர்பாசனத் செயற்றிட்டத்தின் கீழ் நீலபெம்ம, துட்டனேறிய மற்றும் றடவி பெண்டி எல திட்டங்களின் வேலைமீது ரூ. 220இலட்சம் செலவிடப்பட்டது.

அத்துடன், இவ்வாண்டுக்காலத்தில் தேசிய நீர்ப்பாசன புத்தாக்க செயற்றிட்டங்களின் கீழ் 35 சிறு நீர்ப்பாசனத் திட்டங்களின் மீதான புத்தாக்க வேலைகள் முற்றுப்பெற்றதுடன் இவற்றின் மீது ஏற்பட்டமொத்தச் செலவினம் ரூ.1,570இலட்சமாக விளங்கியது. இத்திட்டம் 17 மாவட்டங்களிலுள்ள 174 சிறு நீர்ப்பாசன திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

நீர்ப்பாசன முறையின் ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் கீழ் 1994 இல் 9 புதிய வேளாண்மையாளர் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டதன் மூலம் ஆண்டின் இறுதியில் அவ்வமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 715இற்கு உயர்ந்தது.

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமியஅபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் பாரிய முதலீடுகளைக் கொண்ட மாவட்ட நிகழ்ச்சித்திட்டமாகும். ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மையத்துடன் நன்கு இணைக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தியதன் மூலமாக கிராமிய பிரதேசங்களையும் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் தொடர்ந்தும் முன்னேற்றி வருகின்றது.

தற்பொழுது 14 மாவட்டங்களை உள்ளடக்கிய 15ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டச் செயற்றிட்டங்கள் தொழிற்படுகின்றன. ஐரோப்பிய சமூக ஆணைக்குழுவினால் நிதியிடப்பட்ட மொனராகல நீர்ப்பாசன மற்றும் சமூக அபிவிருத்தி செயற்றிட்டம் 1994இல் தொடங்கியது. 1994இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்தச் செலவினம் 1993 இன் ரூ.5,820 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ.7,540இலட்சமாக விளங்கியது.

## அட்டவணை 1.39

### ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவு 1993 – 1994

ரூபா பத்து இலட்சம்

| மாவட்டம்/செயற்றிட்டம் (ஆ) | | வெளிநாட்டு உதவி மூலங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | இது காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு | | செலவு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள் | உள்நாடு | மொத்தம் | 1993 முடிவில் உள்ளபடி (அ) | 1994 முடிவில் உள்ளபடி (இ) | 1993 ஆம் ஆண்டின் செலவு (அ) | 1994 ஆம் ஆண்டின் செலவு (இ) |
| 1. மாத்தறை | (1979) ... | சீடா | 497.00 | 55.00 | 552.00 | 440.02 | 497.29 | 64.70 | 57.27 |
| 2. அம்பாந்தோட்டை | (1979) ... | நோராட் | 1,330.0 | 50.00 | 1,380.00 | 833.46 | 893.99 | 64.63 | 60.53 |
| 3. நுவரெலியா | (1979) ... | நெதர்லாந்து | 578.00 | 14.00 | 592.00 | 480.40 | 524.30 | 33.15 | 43.90 |
| 4. பதுளை | (1981) ... | வே. அ. ப. நி./சீடா | 1,116.50 | 297.00 | 1,413.00 | 527.95 | 577.23 | 31.94 | 49.28 |
| 5. இரத்தினபுரி | (1984) ... | நெதர்லாந்து | 351.50 | 18.50 | 370.00 | 281.58 | 308.68 | 40.09 | 27.10 |
| 6. மொனறாகலை | (1984) ... | நோராட் | 588.00 | 12.00 | 600.00 | 443.47 | 5,110.46 | 67.43 | 67.98 |
| 7. கேகாலை | (1986) ... | வே. அ. ப. நி. | 408.00 | 228.00 | 636.00 | 400.05 | 494.47 | 79.48 | 94.42 |
| 8. களுத்துறை | (1987) ... | பினிடா (பின்லாந்து) | 397.00 | 70.00 | 467.00 | 404.98 | 414.89 | 33.73 | 9.91 |
| 9. கண்டி | (1987) ... | சேர்மன் தொ. வ. | 254.00 | 26.00 | 280.00 | 77.47 | 104.37 | 22.26 | 26.90 |
| 10. கம்பகா | (1989) ... | யப்பான் ப.கூ.மு. | 786.00 | 98.00 | 884.00 | 77.47 | 104.37 | 22.26 | 26.90 |
| 11. தெ. மா. கி. அ. செ. (ஈ) | (1991) ... | ஆ.அ.வ. | 1,520.00 | 400.00 | 1,920.00 | 112.02 | 303.08 | 70.53 | 191.06 |
| 12. அநுராதபுரம் | (1992) ... | சீடா | 145.80 | 16.20 | 162.00 | 30.14 | 64.50 | 21.43 | 21.29 |
| 13. புத்தளம் ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படை பணிகள் செயற்றிட்டம் | (1992) ... | யுனிசெப் | 106.00 | 52.50 | 158.50 | 46.03 | 67.32 | 18.60 | 21.29 |
| 14. உலர்வலயம் பங்கேற்கும் அபிவிருத்திச் செயற்றிட்டம் | (1993) ... | வே. அ. ப. நி/ சே. தொ. வ. | 571.00 | 274.00 | 845.00 | 29.28 | 80.45 | 29.28 | 51.17 |
| 15. நீர்ப்பாசனமும் சமூகஅபிவிருத்திச் செயற்றிட்டமும் | (1994) ... | ஐ.ச.ஆ. | 355.00 | 67.00 | 422.00 | 0.00 | 9.02 | 0.00 | 9.02 |
| மொத்தம் | ... | | 9,033.30 | 1,678.20 | 10,681.50 | 4,649.06 | 5,403.39 | 581.82 | 754.33 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.
(இ) தற்காலிகமானவை.
(ஈ) தெ. மா. கி. அ. செ. – தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.
(உ) ஐ.ச.ஆ. – ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு

மூலம் : நிதி, திட்டமிடல், இன விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.